Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 07 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 துல்ஹஜ் 27 (19.02.2004) வியாழக்கிழமை இதழ் :141

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து

| WESTERN UNION | MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம் |
|---|---|---|

மூலம்

வங்கிக் கணக்கு தேவையில்லை.

தரகு (Commission) ஏதுமில்லை.

எந்நேரமும் சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க எம்மிடம் நாடுங்கள்

ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்

303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 5392
Fax : 222 3214
E - Mail :- smskr @ eureka.lk

சிவன்கோவில் வீதி, காரைநகர்.
T.P:0602212472

(சி/2228)

## தேர்தல் நியமனக் கூட்டத்திலிருந்து ஆனந்தசங்கரி நேற்று வெளிநடப்பு!

### வேட்பாளர் தெரிவு இழுபறி நிலையில்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் நியமனக்குழுக் கூட்டம் நேற்று கொழும்பில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலிருந்து கட்சியின் தலைவர் ஆனந்தசங்கரி இடையிலே வெளிநடப்புச் செய்ததால் தமிழர் விடுதலைக் கூட்ட ணியின் வேட்பாளர் பட்டியலை இறுதி செய்வது இழுபறிநிலைக்குள்ளாகியிருக்கிறது.

நேற்றுக்காலை 10 மணியளவில் கூடிய தேர்தல் நியமனக்குழுக் கூட்டத்தில் இதில் அங்கம் வகிக்கும் ஏழு உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் - தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் தொடர்பான விபரத்தை கட்சித் தலைவர் ஆனந்தசங்கரி - செயலாளர் இரா.சம்பந்தனிடம் கோரினார்.

இதனையடுத்து வேட்பாளர்கள் தொடர்பான பிரச்சினையை ஆனந்தசங்கரி எழுப்பியதாகத் தெரியவருகிறது.

ஆனால், ஆனந்தசங்கரியின் நிலைப்பாட்டுடன் ஏனைய நியமனக்குழு உறுப்பினர்கள் இணங்கிப்போகாததால் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தனித்து நிற்கின்ற ஆனந்தசங்கரியின் கருத்துக்களை கவனிக்கவேண்டியதில்லை!

### - ஆர்.சம்பந்தன் பேட்டி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் தேசியக்கூட்டமைப்பை ஆதரிப்பதால் நாம் அவர்களுடன் ஆலோசித்தே எமது நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட பொதுச் செயலாளர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

பி.பி.சியின் தமிழோசைக்கு நேற்று வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது-

எமக்கு யாரும் எவ்வித அழுத்தத்தையோ அச்சத்தையோ விடுக்கவில்லை. நம்மை வெளிப்படையாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் ஆதரிக்கின்றனர். அதனால் அவர்களின் ஆலோசனையுடன் செயற்படவே நாம் விரும்புகிறோம்.

எந்த விடயத்தையும் பேசித் தீர்க்க வேண்டும். அதனை விடுத்து ஆனந்தசங்கரி தனித்துநின்று தெரிவிக்கும் கருத்துக்களை நாம் பொருட்படுத்தவேண்டுமென்றில்லை.

நீதிமன்றத்தில் ஆனந்தசங்கரி செய்துகொண்ட முறைப்பாடு தொடர்பாக நான் எவ்விதத்திலும் விவாதிக்க வரவில்லை. ஆனால் அந்த வழக்கு எமது செயற்பாடுகளுக்கு எவ்விதத்திலும் இடையூறாக அமையும் என்று நான் நினைக்கவில்லை எனவும் அவர் தனது செவ்வியில் மேலும் தெரிவித்தருந்தார்.

# உறுதியளித்த நிதியை வழங்குவதாயின் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவேண்டும்!

## வொஷிங்ரன் மாநாட்டில் உதவி வழங்கும் நாடுகள் நிபந்தனை

(வொஷிங்ரன்)

**ரோக்கியோ மாநாட்டில் உறுதியளித்தபடி இலங்கைக்கான நிதியுதவிகளை வழங்கவேண்டுமெனில், சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுத்துச்செல்லப்பட வேண்டுமென வொஷிங்ரனில் நேற்றுமுன்தினம் கூடிய உதவி வழங்கும் நாடுகள் நிபந்தனை விதித்துள்ளன.**

அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலர் றிச்சட் ஆர்மிரேஜ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் மற்றும் நோர்வே நாட்டின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது -

கடந்த இரண்டு வருடங்களாக இலங்கையின் யுத்தநிறுத்தத்தைக் கண்காணித்துவரும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் நடவடிக்கையில் உதவிவழங்கும் நாடுகள் மிகவும் திருப்தியடைகின்றன.

இடம்பெயர்ந்த பெரும்பாலான மக்கள், ஒவ்வொரு மாதமும் தமது சொந்த இடங்களுக்கு மீளத் திரும்பிக்கொண்டிருக்கின்றனர். அத்துடன் பெரும்பாலான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவையெல்லாம் சமாதான முயற்சிகளின் மூலம் கிடைத்தவையாகும்

இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களினதும் நன்மைக்காக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விதிகளை இறுக்கமாகக் கடைப்பிடித்து சமாதான மேசைக்கு இரு தரப்பினரும் திரும்ப வேண்டும்.

ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலுள்ள கருத்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் மா அதிபருக்கு ஆறு மாத சேவை நீடிப்பு!

(கொழும்பு)

பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வாவின் பதவிக் காலத்தை ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க ஆறுமாத காலத்துக்கு நீடித்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்தது.

60 ஆவது வயதைப் பூர்த்தி செய்யும் பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா இன்று ஓய்வுபெறவிருந்தார். இவருக்கு சேவை நீடிப்பு வழங்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் யோசனையை அரசியலமைப்புச் சபை ஏற்கனவே நிராகரித்திருந்தது.

ஆனால் அரசியலமைப்பு சபையின் தீர்மானத்துக்கு முரணான வகையில் ஜனாதிபதி சந்தி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நீதியான தேர்தல் நடைபெறுவதற்கு சகல கட்சிகளும் உதவவேண்டும்!

### ஜப்பானிய அரசு வேண்டுகோள்

இலங்கையில் எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் வன்முறைகளற்ற முறையில் சுதந்திரமாகவும், நீதியாகவும் நடைபெற அனைத்துக் கட்சிகளும் தமது ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.

இவ்வாறு நேற்று ஜப்பான் இலங்கையிலுள்ள சகல அரசியல் கட்சிகளுக்கும் விடுத்த வேண்டுகோளில் கேட்டிருந்தது.

இது தொடர்பாக ஜப்பான் மேலும் தெரிவித்ததாவது - இலங்கையில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலைக் கண்காணிக்க ஜப்பான் கண்காணிப்பாளர்களை அனுப்பவும் ஆலோசித்து வருகிறது.

இவ்வாறு அனுப்புவதை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவுடன் கலந்தாலோசித்த பின்னர் முடிவெடுக்கப்படுமனவும் கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகம் நேற்றுத் தெரிவித்தது.

அத்துடன் தேர்தல் நடவடிக்கையைக் கண்காணிக்கும் கண்காணிப்பாளர்களுக்கான செலவாக ஜப்பான் அரசு 30 ஆயிரம் டொலர்களை இலங்கையிலுள்ள உள்ளூர் நிறுவனம் ஒன்றிடம் கையளிக்கவுள்ளதாக தூதரகம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்புடன் இணைந்து சந்திரசேகரனும் போட்டி!

### தமிழ்ச்செல்வனைச் சந்தித்த பின் முடிவு



மலையகத்தில் தமிழ் மக்கள் செறிவாக வாழும் இடங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும், ஏனைய இடங்களில் சூழ்நிலைக்கு ஏற்ற வகையிலும் தேர்தலில் போட்டியிடப் போவதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

நேற்றுக்காலை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனுடன் ஒரு மணிநேர கலந்துரையாடலை நடத்திய பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர் தாயகத்தில் ஒரு அணியில் போட்டியிட்டு தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மலையகத்தில் தமிழர் செறிவான(12 ஆம் பக்கம பார்க்க)

## 54 இலங்கையர் எகிப்தில் கைது!

(கெய்ரோ)

சட்ட விரோதமாக இத்தாலி நோக்கிச் சென்ற 54 இலங்கையர்கள் எகிப்தில் கைது செய்யப்பட்டனர்.

இந்தத் தகவலை கெய்ரோ நகரப் பொலிஸார் இலங்கைப் பொலிஸாருக்கு நேற்று அறிவித்தனர்.

இவர்கள் நீர்கொழும்பு கடற்பரப்பினூடாகவே இத்தாலிக்குச் சென்றதாக விசாரணைகள் மூலம் தெரியவந்திருப்பதாக கெய்ரோப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து இவர்களை மீண்டும் இலங்கைக்கு திருப்பியனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
mail :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

யாழ். பல்கலைக்கழக

# புவியியற்துறை அபிவிருத்திக்கு 3.5 மில்லியன் நிதி ஒதுக்கீடு!

## நோர்வே பல்கலைக்கழக பேராசிரியர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புவியியற் துறைககு நோர்வே ஆராய்ச்சிக்கழகம் ஒரு வருடத்திற்கு 3.5 மில்லியன் ரூபாவை அபிவிருத்திப்பணிக்காக ஒதுக்கியுள்ளது.

இவ்வாறு நோர்வே பல்கலைக் கழக பேராசிரியர் கிறிஸ்ரீன் ரெக்கி தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்- யாழ்.பல்கலைக் கழக புவியியற்துறை பேராசிரியர் களின் வேண்டுகோளுக்கிணங்க நான்இங்கு வந்தேன். இங்கு வந்து சில தினங்களுக்கு முன்பு புவியியற் துறை மண்டபத்தில்கருத்தரங்கு நடத்தினேன். நோர்வேயின் ஆராய்ச் சிக்கழகம் புவியியற்துறையினை முன்னேற்றுவதற்கு சில நடவடிக் கைகளை மேற்கொண்டுள்ளது. அத னடிப்படையில் மூன்றுவருடத்திற்கு தொடர்ந்து ஒருவருடத்திற்கு 3.5 மில்லியன் ரூபா வீதம் 11 மில்லி யன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

புவியியற்துறையில் கல்வி கற் கும் மாணவர்களில் சிறந்த மாண வர்கள் எனத் தெரிவு செய்யப்படும் சில மாணவர்களுக்கு, நோர்வே பல் கலைக்கழகத்தில் கல்வி கற்பதற்கு வசதிகள் பல செய்துகொடுக்கப்பட வுள்ளன. இதைவிட, யாழ்.பல்க லைக்கழக புவியியற்துறை விரிவுரை யாளர்கள் நோர்வே பல்கலைகழகத் துடன் தொடர்புகளை மேற்கொள்ளு வதற்கும், நோர்வே விரிவுரையாளர் கள் இங்குவந்து விரிவுரைகளை மேற்கொள்வதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எமது நோக்கம் மாணவர்களின் தரத் தினை உயர்த்துவதேயாகும் என அவர் கருத்துத் தெரிவித்தார்.

# மினிபஸ் சாரதிக்கு விளக்கமறியல்!

கடந்த வியாழக்கிழமை கைதடி நுணாவில் பகுதியில் இடம்பெற்ற மினிபஸ் விபத்தில் சம்பந்தப்பட்ட மினிபஸ்சின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

சாந்தி கோப்பாய் மத்தி கோப்பாயைச் சேர்ந்த கந்தசாமி இரகுநாதன் என்பவரே ஆஜர்படுத்தப்பட்டவராவார். இவரை மார்ச் மாதம் 1 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும், 61-4157 இலக்க வாகனத்தை மோட்டார் வாகன பரிசோதகர் மூலம் பரிசோதனை செய்து அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் சாவகச்சேரி நீதிவான் என்.பாலசுப்பிரமணியம் பொலி ஸாருக்கு கட்டளையிட்டுள்ளார். (25,29)

# கலாசார அலுவலர் பதவிக்கான போட்டிப்பரீட்சை மார்ச் 13 இல்

கலாசார அலுவலர் பதவிக்கு ஆட்களை தேர்ந்தெடுப்பதற்கான எழுத் துப் போட்டிப் பரீட்சை எதிர்வரும் மார்ச்மாதம் 13 ஆம் திகதி நடத்துவதற்கு ஒழுங்குகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படி பதவிக்காக விண்ணப்பங்களை அனுப்பியவர்களுக்கு விண் ணப்பம் கிடைத்தமைக்கான கடிதங்கள், தற்போது இந்துகலாசார அலுவல் கள் திணைக்களத்தின் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் விரைவில் அனுப்பிவைக்கப்படும். இந்து பண்பாடும் நாகரிகமும் 2 மணித்தியாலம், தமிழ்மொழி 2 மணித்தியாலம், பொதுஅறிவு 1 மணித்தியாலம் எனப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன. (12)

யாழ். மாவட்ட

# விளையாட்டு வீரர்களுக்கு வழியனுப்பு நிகழ்வு!

தமிழீழ தேசிய விளையாட்டு விழாவிற்கு செல்கின்ற யாழ். மாவட்ட வீரர்களை வாழ்த்தி வழிஅனுப்பும் நிகழ்வு யாழ்.மாவட்ட அரசியற்துறைச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில், யாழ்.மாவட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் இளம் பரிதி, யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறைப்பொறுப்பாளர் மாதுளன், மகளிர் அரசியற்துறைப்பொறுப்பா ளர் கலைவிழி ஆகியோர் உட்படபலர் கலந்துகொண்டனர். தேசிய விளை யாட்டு விழாவிற்குச் செல்லவிருக்கும் விளையாட்டு வீரர்கள் அனைவரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பல ரின் ஆசிகளை பெற்றுக்கொண்டனர்.


ராஜா யாழ்ப்பாணம்.
விஜயகாந்த், வடிவேலு, பிரபுதேவா, பாண்டியராஜன் நடித்த

எங்கள் அண்ணா
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே) (சி-2197)

திறைஞ்சனல்ஸ் சங்கானை
ஜோதிகா, ரம்பா, லைலா, விவேக் நடித்த
த்ரீ றோசஸ்
காட்சி நேரம்:11.00, 2.45, 6.00, (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
DUNGONS DRAEONS
(சி-2196)

யசோ இறபர் ஸ்டாம்
75/=
பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே
யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)

விற்பனையாளர் தேவை
எமது நிறுவனத்துக்கு விற்பனையாளர்கள் தேவை.
ஆசீர் வணிக நிலையம்,
202 A, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-2234)

றோமன் கத்தோலிக்க பெருமக்களே உங்களுக்கு ஓர் நற்செய்தி
பழைய ஏற்பாடும் சேர்ந்த பைபிள் 285/= சொற்ப பிரதிகள் மட்டுமே கைவசமுள்ளது. உடனே பெற்றுக் கொள்ள,
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 2225542
(சி/2231)




சிறிமாதவன்
தற்காலிக இடமாற்றம்
T.V. டெக், வீடியோ, ஓடியோ கசெட், கசெட் ரேடியோ, சங்கீத ஓகன்கள், சகலவித கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள், பிலிம்றோல் மற்றும் அன்பளிப்புப் பொருள்கள் பெற்றுக்கொள்ளச் சிறந்த இடம்.
இதுவரை நாளும் இல.97 கஸ்தூரியார் வீதியில் இயங்கிய சிறிமாதவன் திங்கள் முதலாக ஜும்மா பள்ளி லேன், கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம். என்ற விலாசத்தில் இயங்கிவருகிறது என்பதை அன்பர்கள்அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.
சிறிமாதவன்
ஜும்மா பள்ளிலேன்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 6365.
(சி/2236)

மக்கள் வங்கி
மக்கள் வங்கியின் யாழ். பல்கலைக்கழகக் கிளையில் (முன்னைய யாழ்/நவீன சந்தைக் கிளை) 31.12.1984 இற்கு முன்பு அடகுவைத்து, மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளையில் வைத்து
பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும்

| கிளையின் விபரம் | ஏலம் விடப்படும் திகதிகள் | ஏலம் செய்யப்படும் இடம் |
|---|---|---|
| யாழ். பல்கலைக்கழகக் கிளை (முன்னைய யாழ்/ நவீன சந்தைக் கிளை) | 21.02.2004 இல் இருந்து 23.02.2004 வரை | யாழ்/ஸ்ரான்லி வீதிக்கிளை |

மக்கள் வங்கி
பிரதேச முகாமையாளர்,
மக்கள் வங்கி

# ஐ.தே.கட்சி – காங்கிரஸ் இரகசிய உடன்படிக்கையாம்!

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே, இரகசிய உடன்படிக்கை ஒன்று செய்யப்பட்டுள்ளதாக - தேசிய ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடனான இந்த உடன்படிக்கையை, கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் செய்துகொண்டதாக, முன்னாள் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா கூறினார்.

நாடாளுமன்றத் தேர்தலை நோக்காகக் கொண்டே, அமைச்சர் ரவூப் ஹக்கீம் இந்த உடன்படிக்கையை ஐக்கிய தேசியக் கட்சியுடன் செய்துகொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் அனைத்து முஸ்லிம்களையும் ஒரே குடையின்கீழ் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஓரணியில் திரட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதை சுட்டிக்காட்டிய ஹிஸ்புல்லா, முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் அதற்குப் போதிய ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இரகசிய உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டதன்மூலம், முழு முஸ்லிம் சமூகத்துக்கும் ரவூப் ஹக்கீம் துரோகமிழைத்துள்ளதாகவும் ஹிஸ்புல்லா குற்றஞ்சாட்டினார்.

# கதிர்காமரின் திடீர் அறிவிப்புக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டனம்

ஏ.பி.சி.நிறுவனத் தொலைக்காட்சி சேவையைத் தடைசெய்த அமைச்சர் கதிர்காமரின் செயற்பாட்டை, ஐரோப்பிய ஊடகவியலாளர் ஒன்றியம் கடுமையாகச்சாடியுள்ளது.

கட்டுப்பாடற்ற ஊடகவியலாளர் அமைப்பு என்று அழைக்கப்படும் ஐரோப்பிய ஊடகவியல் கண்காணிப்பு அமைப்பே, இவ்வாறு தனது அதிருப்தியையும், கண்டனத்தையும் வெளியிட்டுள்ளது.

கொழும்பில் ஆரம்பிக்கப்படவிருந்த ஏ.பி.சி.நிறுவனத்தின் தனியார் தொலைக்காட்சி சேவையைத் தடைசெய்வதற்கான எதுவித காரணங்களும் குறிப்பிடாது தடைசெய்வதாக புதிதாக நியமிக்கப்பட்ட தகவல் தொடர்பு அமைச்சர், லக்ஷ்மன் கதிர்காமர் கடந்த திங்கட்கிழமை திடீரென அறிவித்தார்.

அதைத் தொடர்ந்து, ஏ.பி.சி.நிறுவனம் இதற்கு எதிராக நீதிமன்றில் மேன்முறையீடு செய்துள்ளது.

இந்தநிலையில், லக்ஷ்மன் கதிர்காமருக்கு எழுத்துமூலம் வழங்கப்பட்டுள்ள கண்டனக் கடிதத்தில், எதுவித காரணங்களுமின்றித் தடைசெய்யப்பட்ட ஏ.பி.சி.நிறுவனத்தின் தொலைக்காட்சி சேவையின் மீதான தடையை - உடனே ரத்துசெய்து, மீண்டும் அனுமதியை வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது.

சென்றவாரம் லக்ஷ்மன் கதிர்காமர் தகவல் தொலைத்தொடர்பு அமைச்சராக நியமிக்கப்பட்ட பின்னர், ஊடகவியலாளருக்கு வழங்கிய பேட்டியில் அனைத்து அரச ஊடகங்களும் நேர்மையாகவும், நியாயமாகவும் செயற்படப் பணிக்கப்படுமென்றும், தனியார் ஊடகங்கள் அதன் உரிமையாளர்களுக்கே முழுவதும் சொந்தமாக இருப்பதனால், அவர்கள் விரும்பியவிதத்தில் அவற்றை செயற்படுத்தலாம் என்றும் தெரிவித்த கருத்தை மேற்கோள் காட்டியுள்ள ஐரோப்பிய அமைப்பு, ஒரு சில நாட்களுக்குள் இப்படி எதிர்மாறான முடிவுகளை எடுப்பதற்கு மேலிடத்து அரசியல் அழுத்தமே காரணம் என்றும், அதனால் உடனடியாக இந்தத் தடையுத்தரவை ரத்துசெய்து, தொலைக்காட்சி அனுமதியை வழங்கும்படியும் கோரிக்கை விடுத்துள்ளது.

## ரிரோன் பெர்னாண்டோ தேசியப் பட்டியல் மூலம் அமைச்சராவார்

சென்ற தேர்தலில் தேசியப்பட்டியல்மூலம் அமைச்சர்களாக, நாடாளுமன்றம் சென்ற பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், திலக் மாரப்பன ஆகியோருக்குப்பதிலாக இம்முறை வெளிநாட்டு அமைச்சர் ரிரோன் பெர்னாணடோ தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றம செல்லவுள்ளார்.

இந்தமுறை தேர்தலில் திலக் மாரப்பன மற்றும் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோர் வேட்பாளர்களாகப் போட்டியிடவுள்ளனர். இதற்கிடையில் இந்த முறை இடம்பெறவுள்ள தேர்தல், மிக அதிகமான வன்முறைகள் நிறைந்ததாக இருக்க வாய்ப்புள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

## படையினரால் பற்றைகள் எரிப்பு

ஏ-9 நெடுஞ்சாலையின் செம்மணிப் பகுதியில், வீதி ஓரமாக வளர்ந்திருந்த பற்றைகள்யாவும், அந்தப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரால் அகற்றப்பட்டு துப்புரவு செய்யப்பட்டுள்ளது. நுழைவாயிற் பிள்ளையார் ஆலயம் முதல், அரியாலை வரையான பகுதியே இவ்வாறு துப்புரவு செய்யப்பட்டதுடன், அருகிலுள்ள வயல்வெளியில் வளர்ந்திருந்த புற்களும் தீயிட்டு எரிக்கப்பட்டது. (24)

# சுதந்திர முன்னணி ஆட்சிபீடமேறினால் புரிந்துணர்வு உடன்படிக்கை பாதிக்கும்!



## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

**எதிர்வரும் பொதுத்தேர்தலில் மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி ஆட்சி பீடமேறினால், போர்நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை பாதிக்கப்படும் என்பது உறுதியாகிவிட்டதாக, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

**அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் -**

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச அண்மையில் ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியில்- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிபீடமேறினால், தற்போது நடைமுறையிலுள்ள போர்நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்ந்து அமுலில் இருக்காது என்று கூறியிருப்பதை மேற்கோள்காட்டியே, பேராசிரியர் பீரிஸ் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

போர்நிறுத்த உடன்படிக்கையைப் பொறுத்தவரையில் - அதில் ஏதும் மாற்றம் செய்யவேண்டுமானால், அதற்கு ஒப்பந்தத்தோடு சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புக்களும் இணங்கவேண்டும் என்று உடன்படிக்கையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. தற்போது இத்தகையதொரு உடன்படிக்கையே நடைமுறையிலிருப்பதாகத் தாம் கருதவில்லை எனவும் விமல் வீரவன்ச கூறினார்.

இதனால், புதிய அரசாங்கம் ஒன்று ஆட்சிக்கு வருமானால், தற்போது நடைமுறையிலுள்ள போர்நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை நிச்சயமாகப் பாதிப்புக்குள்ளாகும் என்பது தெளிவாகியுள்ளது எனத் தெரிவித்தார்.

# கட்சித்தாவல் தொடர்கின்றது மேலும் இருவர் ஐ.தே.கவில்

வடமத்திய மாகாணசபையின் முன்னாள் அமைச்சர் ஒருவரும், தென் மாகாணசபையின் பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர் ஒருவரும் ஐக்கிய தேசியக் கட்சியில் நேற்று இணைந்துகொண்டனர்.

வடமத்திய மாகாணசபையின் முன்னாள் கிராம அபிவிருத்தி அமைச்சர் கே.பி.தென்னக்கோன், தென் மாகாணசபையின் பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுப்பினர் வஜேபால ஹெட்டி ஆராய்ச்சி ஆகிய இருவருமே, பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிடமிருந்து ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையை நேற்றுப் பெற்றுக்கொண்டனர்.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்ததன பின்னர், அநுராதபுரத்தில் பாதுகாப்பற்ற கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு, மீண்டும் யுத்தம் ஏற்படும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதாக, ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொண்ட கே.பி.தென்னக்கோன் தெரிவித்தார்.

# கண்காணிப்புக்குழுத் தலைவர் மன்னாரில் புலிகளுடன் பேச்சு

கண்காணிப்புக்குழுவின் தலைவர் - மேஜர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே நேற்றுமுன்தினம் மன்னாருக்குச் சென்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடினார்.

நேற்றுமுன்தினம் காலை 11 மணிககு மன்னார் மாவட்டத்திற்குச் சென்ற கண்காணிப்புக்குழுவின் தலைவர் - விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்திற்குச் சென்று, அங்குள்ள நிலமைகள் குறித்து கலந்துரையாடினார்.

மன்னார் மாவட்டத்தில் பாதுகாப்பு நிலைமைகள், சமாதான முயற்சிகள் தடைப்பட்டுள்ளமையால், அங்கு ஏற்பட்டுள்ள நிலமைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் மன்னார் மாவட்ட கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் தென்றல்மாறன், அரசியல்துறை மகளிர்பிரிவின் பொறுப்பாளர் நிலவரசி ஆகியோரும், கண்காணிப்புக் குழுவின் தலைவர் புறூவ் ஹொவ்டே, மன்னார் மாவட்ட யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவின் பொறுப்பதி காரி அண்டாச் ஹெடடிங் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இராணுவத்தினரும், விடுதலைப் புலிகளும் கண்காணிப்புக்குழுவுடன் யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுலசெய்வற்கும், இருதரப்பினரும் சமாதானப் பேச்சுகளைத் தொடர்வதற்கும், புரிந்துணர்வுடன் செயற்பட வேணடும் எனவும் புறூவ் ஹொவ்டே வலியுறுத்தினார்.

அத்துடன் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மன்னார் அரசஅதிபர், தள்ளாடி இராணுவ முகாமில் படை அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர். (201)

# ஆட்சிக்காலத் தவறுகளுக்காக மன்னிப்புக் கோரினார் ரணில்!

ஐக்கிய தேசிய முன்னணியின் கடந்த இரண்டு வருடகால ஆட்சியில் சில தவறுகள் நிகழ்ந்தன. அதற்கு யார் பொறுப்பாக இருந்தாலும் - இந்த அரசாங்கத்தின் பிரதமர் என்றவகையில் அதற்கான தார்மீகப் பொறுப்பை, தான் ஏற்றுக்கொள்வதாக நாட்டுமக்களிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது மனவருத்தத்தைத் தெரிவித்தார்.

தொலைக்காட்சிமூலம் நேற்றுமுன்தினம் மாலை நாட்டு மக்களுக்கு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தனது உரையில் -

யுத்தத்தின் அழிவிலிருந்து நாட்டை விடுவிக்க நோர்வே அரசின் அனுசரணையுடன் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கத் தீர்மானித்தேன். இதனை அமுல்படுத்திய போது, நாட்டில் இயல்புநிலை ஏற்பட்டது. விடுதலைப் புலிகளுடன் சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்லவேண்டியிருந்தது.

இந்த நிலையில், விடுதலைப் புலிகளுடன் தேசிய ஒருமைப்பாட்டுக்குப் பாதிப்பு ஏற்படாதவகையில், மாற்றுத்திட்டம் குறித்துக் கலந்துரையாட உடன்பட்டதுடன், இடைக்கால நிர்வாகம் குறித்த புலிகளின் திட்டவரைபும் சமர்ப்பிக்கப்பட்டது. யுத்தத்துக்கு முடிவுகாண மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தன.

இதன்மூலம் பொருளாதாரரீதியிலும், மக்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டது. அத்துடன், நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை, சரியான பொருளாதாரக் கொள்கை என்பவற்றின் அடிப்படையில் சர்வதேச சமூகம் அரசாங்கத்திடம் உதவி வழங்கும் மாநாட்டின்மூலம் 2000 கோடி ரூபா வழங்கியது.

ஜனாதிபதியுடன் கசப்புணர்வு ஏற்பட்டாலும், அதனை விடுத்து புரிந்துணர்வுடன் செயற்பட முயற்சித்தேன். இநத நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து 18 உறுப்பினர்கள், ஐக்கிய தேசிய கட்சியுடன் இணையப் போகிறார்கள் என்பதற்காக, முக்கிய மூன்று அமைச்சுக்களையும் ஜனாதிபதி பறித்ததனால், சமாதானப்பேச்சு தடைப்பட்டு நாட்டில் உறுதியற்றநிலை ஏற்பட்டது.

ஜனாதிபதிக்கு எதிராக குற்றவியல் பிரேரணை கொண்டுவருவதற்கும் பறிக்கப்பட்ட மூன்று அமைச்சுக்கான நிதியினை நிறுத்துவதற்கும், சட்டரீதியான உரிமை இருந்தும், அரசு இணைந்து செயற்படவேண்டும் என்பதற்காக அதனை முன்னெடுக்கவில்லை

ஜனாதிபதியுடன் மனோ - மலிக் குழுவினர் பேச்சுக்களை நடாத்தி, இணைந்து உடன்பாடான அரசியலை நடாதத இணங்கினோம். உடன்பாடு எட்டப்படாத விடயம் குறித்து ஜனாதிபதியுடன் பேச்சுக்களை நடாத்த திட்டமிட்டவேளை, அரசாங்கத்தின் அனுமதியின்றி ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைத்து, ஏப்ரல் 2 ஆம் திகதி தேர்தல் நடாத்துவதாகவும் அறிவித்தார்.

சமாதானப்பேச்சை மீண்டும் தொடரவும், அபிவிருத்தியை முன்னெடுக்கவும் மக்கள் முன்வரவேண்டும் எனவும் நாட்டு மக்களிடம் பிரதமர் வேண்டுகோள்விடுத்தார்.

## பொதுத் தேர்தலால்

# சமாதான நடவடிக்கைகளில் பாதிப்புக்கள் ஏற்படக்கூடாது

## கிறிஸ் பற்றன் கோரிக்கை

(கொழும்பு)



இலங்கையில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் காரணமாக, சமாதான நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்படக்கூடாது எனத் தாம் எதிர்பார்ப்பதாக, ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ் பற்றன் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலில் தற்போது தங்கியிருக்கும் கிறிஸ் பற்றன், சர்வதேச செய்தி ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே இதனைத் தெரிவித்தார்.

திடீர் தேர்தல் அறிவிப்பின் காரணமாக இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் ஓரங்கட்டப்படும் அபாயத்தை எதிர்நோக்கியிருப்பதாகவும்- இவ்வாறான அரசியல் நெருக்கடி காரணமாகச் சமாதான நடவடிக்கைகள் பாதிப்படையக்கூடாது என்பதே தமது எதிர்பார்ப்பு என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் திடீர் தேர்தல் குறித்தும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். கடந்த நவம்பர் மாதம் இலங்கைக்கு விஜயம்செய்த கிறிஸ் பற்றன், சமாதான நடவடிக்கைகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் அவதானமாக இருப்பதாகச் சுட்டிக்காட்டினார். அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்வதனையே ஐரோப்பிய ஒன்றியம் விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# இரண்டாவது லீக் போட்டியிலும் இலங்கை அணி வெற்றிபெற்றது



(டாக்கா)

பங்களாதேஷில் நடைபெற்றுவரும் 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நான்கு லீக் ஆட்டங்களில் இலங்கை, இங்கிலாந்து, பங்களாதேஷ், பாகிஸ்தான் அணிகள் வெற்றிபெற்றன.

ராஜ்ஷாவில் நடைபெற்ற 'ஏ' பிரிவுப் போட்டியில் இலங்கை - கனடா அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி, முதலில் கனடா அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்தது.

கனடா அணி வீரர்கள் நிலைத்து நின்று ஆடமுடியாமல் மளமளவெனத் தமது விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தனர். கனடா அணி வீரர் ரி.பஸ்தியாம்பிள்ளை ஆகக்கூடுதலாக 20 ஓட்டங்களை எடுத்தார். நான்கு வீரர்கள் ஓட்டம் எதனையும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

31.2 ஓவர்களில் கனடா அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 81 ஓட்டங்களை மாத்திரம் பெற்று ஆட்டமிழந்தது.

இலங்கை அணி வீரர் கோசல குலசேகர 10 ஓவர்கள் பந்துவீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து ஆட்டத்தை ஆரம்பித்த இலங்கை அணி, 19 ஓட்டங்களை எடுத்திருந்தபோது முதல் விக்கெட்டைப் பறிகொடுத்தது. ஆயினும், தமிந்த குலரத்ன 13 ஓட்டங்களுடனும், எச்.ஈ.விதான 52 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் விளையாடி வெற்றி இலக்கைத் தாண்டி 84 ஓட்டங்களைப் பெற்றனர். இதன்மூலம் இலங்கை அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. லீக் ஆட்டத்தில் இலங்கை அணி பெற்ற இரண்டாவது வெற்றி இதுவாகும்.

'பி' பிரிவு போட்டியில் இங்கிலாந்து - உகண்டா அணி சிட்டகொங்கில் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற உகண்டா அணி முதலில் இங்கிலாந்தை துடுப்பெடுத்தாட அழைத்தது. 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட் இழப்புக்கு 254 ஓட்டங்களை இங்கிலாந்து அணி பெற்றது.

லூக்ரைற் 70 ஓட்டங்களையும், சமித் பட்டேல் 55 ஓட்டங்களையும், ஜேம்ஸ் கில்ரெத் அதிரடியாக 30 பந்துகளில் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

தொடர்ந்து ஆட்டத்தை ஆரம்பித்த உகண்டா அணி வீரர் றொனால்ட் செமண்டாவே ஆகக்கூடியதாக 12 ஓட்டங்களைப் பெற்றார். நான்கு வீரர்கள் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

10 ஓவர்கள் நிறைவில் 46 ஓட்டங்களுக்குள் உகண்டா அணி சுருண்டதால் 213 ஓட்டங்களால் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றது.

டாக்காவில் நடைபெற்ற இன்னொரு லீக் போட்டியில் ஸ்கொட்லாந்து - பங்களாதேஷ் அணிகள் மோதின.

ஸ்கொட்லாந்து அணி 30.2 ஓவர்களில் 95 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இந்த அணியில் கைல் கோட்சர் பெற்ற 42 ஓட்டங்களே அதிகபட்ச ஓட்டமாக இருந்தது.

பங்களாதேஷ் வீரர்கள் சகடத் ஹுசேன் 3 விக்கெட்டுக்களையும், எனாமுல் ஹக் 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 12.2 ஓவர்களிலேயே ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 96 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. நயீம் இக்பால் 35 பந்துகளில் 39 ஓட்டங்களையும், நயீம் இஸ்லாம் 38 பந்துகளில் 49 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர். இந்தப் போட்டியில் 9 விக்கெட்டுக்களால் பங்களாதேஷ் வெற்றிபெற்றது.

'டி' பிரிவில் பாகிஸ்தான் - அயர்லாந்து அணிகள் குல்னா மைதானத்தில் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி - 47.5 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 142 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இந்த அணி வீரர் அன்ரூ றிடில்ஸ் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களைப் பெற்றார். பாகிஸ்தான் வீரர் மன்சூர் அம்ஜத் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

தொடர்ந்து ஆட்டத்தை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி 25.2 ஓவர்களிலேயே 146 ஓட்டங்களை 2 விக்கெட்டுக்களை இழந்து பெற்றதன்மூலம் 8 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது. காலித் லதீப் 50 ஓட்டங்களையும், அட்னான் சகீர் 64 ஓட்டங்களையும் பெற்றனர்.

## வடமராட்சி வலய கரப்பந்தாட்ட போட்டி

(நவிண்டில்)

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் வடமராட்சி பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படும் 15, 17, 19 வயதுக்கு உட்பட்டோருக்கான கரப்பந்தாட்டப் போட்டி - எதிர்வரும் 22 ஆம் திகதியும், 23 ஆம் திகதியும் காலை 8 மணி முதல் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

இந்தப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட பிரிவில் 8 பாடசாலைகளும், 17 வயதுக்குட்பட்ட பிரிவில் 11 பாடசாலைகளும், 19 வயதுக்குட்பட்ட பிரிவில் 11 பாடசாலைகளும் பங்குபற்றவுள்ளதெனவும், இங்கு ஒரே நேரத்தில் மூன்று போட்டிகள் நடைபெறுவதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதெனவும், உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் வே.வல்லிபுரம் தெரிவித்தார்.(116)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 14 ஆம் திகதி 2 மணியளவில் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அதிபர் இரஞ்சிதம் குட்டித்தம்பி தலைமையில் ஆரம்பமாகியது.

இந்த விளையாட்டுப் போட்டியில் ஹோஸ்ரிங்ஸ் இல்லம் (சிவப்பு) 311 புள்ளிகளைப் பெற்று சம்பியன் கேடயத்தைத் தனதாக்கிக் கொண்டது.

258 புள்ளிகளைப் பெற்ற மில்லர் இல்லம் (நீலம்) இரண்டாம் இடத்தையும், $244\frac{1}{2}$ புள்ளிகளைப் பெற்ற ஹவுஸ்ரன் இல்லம் (பச்சை) மூன்றாம் இடத்தையும் $199\frac{1}{2}$ புள்ளிகளைப் பெற்ற ஹிச்கொக் இல்லம் (மஞ்சள்) நான்காம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

2003 ஆம் ஆண்டிலும் ஹோஸ்ரிங்ஸ் இல்லம் 245 புள்ளிகளைப் பெற்று சம்பியன் கேடயத்தைத் தனதாக்கிக் கொண்டது குறிப்பிடத்தக்கது. (116)

★ ★ ★ ★

இமையாணன் அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 21 ஆம் திகதி பி.ப 2 மணிக்கு அதிபர் திருமதி ந.சந்திரசேகரம் தலைமையில் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.

இந்தப் போட்டியில் - வலயக் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளரும், பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளருமான சி.புஸ்பலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (116)

# விளையாட்டு

## சூதாட்டக்காரர்களுடன் தொடர்பு; நிராகரிக்கிறார் ஷேன் வோர்ன்!

இந்திய சூதாட்டக்காரரைச் சந்தித்ததாகக் கூறப்படுவது சுத்தப்பொய் என்று, அவுஸ்ரேலிய சுழற்பந்து வீச்சாளர் வோர்ன் மறுத்துள்ளார்.

வோர்ன் கடந்த உலகக்கோப்பை போட்டிக்கு முன்னதாக தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்தை பயன்படுத்தியமை கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஒரு ஆண்டு போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது. இந்த ஒரு ஆண்டுத் தடை சமீபத்தில் முடிவடைந்து மீண்டும் விளையாட வோர்ன் திரும்பியுள்ளார்.



இந்தநிலையில், புதிதாக வோர்ன் மீது சூதாட்டப் புகார் ஒன்று கிளம்பியுள்ளது. 1999 ஆம் ஆண்டு நடந்த உலகக்கோப்பை போட்டியில் வோர்ன் சூதாட்டத்தில் ஈடுபட்டிருக்கக்கூடும் என்று இந்தியாவில் இருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தப் பத்திரிகையில் 1999 ஆம் ஆண்டு உலகக்கோப்பைப் போட்டியின்போது லண்டனில் உள்ள ஒரு ஹோட்டலில் மேற்கிந்திய தீவுகள் அணியின் அணித்தலைவர் லாரா மற்றும் வோர்ன் ஆகியோர் டெல்கியைச் சேர்ந்த சூதாட்டக்காரர் ரதன் மெக்ராவை சந்தித்துப் பேசியதாக கூறப்பட்டுள்ளது.

இந்தச் சூதாட்டப் புகாரை வோர்ன் மறுத்துள்ளார். இது சுத்தப் பொய், தான் ஒருபோதும் சூதாட்டக்காரரை சந்தித்தது இல்லை என்று கூறியுள்ளார்.

வோர்ன் மீதான இந்தக் குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்தும் எண்ணம் இல்லை என்று அவுஸ்ரேலிய கிரிக்கெட்சபை அறிவித்துள்ளது.

## பொடா வழக்கிலிருந்து ம.தி.மு.கவினரை விடுவிக்க சென்னை உயர்நீதிமன்றம் மறுப்பு



(சென்னை)

வைகோவுடன் கைதுசெய்துசெய்ப்பட்ட 8 ம.தி.முகவினரையும் பொடா வழக்கிலிருந்து விடுவிக்க சென்னை உயர்நீதிமன்றம் மறுத்துவிட்டது.

மதுரை அருகே திருமங்கலத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதாக வைகோ உள்ளிட்ட 9 ம.தி.மு.கவினர் மீது பொடா சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டு - பூந்தமல்லி நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடந்துவருகின்றது.

இந்த நிலையில், வைகோ தவிர மற்ற 8 ம.தி.மு.கவினரும் தங்களை வழக்கிலிருந்து விடுவிக்கக் கோரி பூந்தமல்லி பொடா நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர். ஆனால், இந்த மனுக்களை பூந்தமல்லி நீதிமன்றம் நிராகரித்து விட்டது.

இதையடுத்து, 8 பேரும் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தனர். இந்த மனுக்களை விசாரித்த நீதிபதிகள் சிர்புர்கர், இப்ராகிம் கலிபுல்லா ஆகியோர் அடங்கிய குழு இவர்களது மனுக்களை தள்ளுபடி செய்தது.

பொடா நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் இந்த மனுக்கள் தேவையற்றவை என நீதிபதிகள் கருத்துத் தெரிவித்தனர்.


## திருமாவளவன் - கிருஷ்ணசாமி வெங்கையா நாயுடுவுடன் பேச்சு



புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டொக்டர் கிருஷ்ணசாமி, விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச்செயலாளர் தொல்.திருமாவளவன் மக்கள் தமிழ்த் தேசம் கட்சியின் தலைவர் கண்ணப்பன் ஆகியோர் டெல்கியில் பா.ஜ.க. தலைவர் வெங்கய்யா நாயுடுவை சந்தித்துப் பேசினார்..

தி.மு.க கூட்டணியில் இடம் தரப்படாததால், தனியாக மூன்றாவது அணியை அமைத்துள்ள இவர்கள்- அதில் மற்ற கட்சிகளையும் சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில், அ.தி.மு.கவுடன் கூட்டணி இழுபறியில் உள்ள பா.ஜ.கவையும் தங்களது அணிக்குள் இழுக்கும் திட்டத்துடன் அவர்கள் நாயுடுவைச் சந்தித்தனர்.



ஆனால், அ.தி.மு.கவுடன் கூட்டணி உறுதியாகிவிட்டதாகவும், தொகுதிப் பங்கீட்டுப் பிரச்சினைதான் இருப்பதாகவும் கூறிய நாயுடு - இவர்களது அணியில் சேர ஆர்வம் காட்டவில்லை. வருங்காலத்தில் நாம் இணைந்து செயற்படக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டால், அச்சமயம் சேர்வோம் என்ற உறுதிமொழியை மட்டும் தந்து திருப்பியனுப்பிவிட்டார்.

பா.ஜ.கவுடன் தி.மு.க கூட்டணி வைத்திருந்ததை வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் எதிர்த்தவர் திருமாவளவன். பா.ஜ.க வருணாசிர தர்மத்தை ஆதரிக்கும் கட்சி என்றும் தாக்கியுள்ளார்.

அவர் பா.ஜ.கவுடன் கூட்டணி சேர முயன்றது பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

## தமிழகத்தில் 7 தொகுதிகள் மட்டும் பாரதீய ஜனதாவுக்கு ஒதுக்கப்பட்டது



அ.தி.மு.கவுடன் கூட்டணி சேர்ந்துள்ள பாரதீய ஜனதாக் கட்சிக்கு 7 தொகுதிகளை தமிழக முதல்வர் ஜெயலலிதா ஒதுக்கியுள்ளார். இதில் புதுக்கோட்டை இடம்பெறவில்லை.

வடசென்னை, சிதம்பரம் (தனி), தர்மபுரி, நீலகிரி, கோவை, நாகர்கோவில மற்றும் பாண்டிச்சேரி ஆகிய தொகுதிகளே ஒதுக்கப்பட்டுள்ளன. இந்தத் தகவலை ஜெயலலிதா அறிக்கையொன்றில் தெரிவித்தார்.

அ.தி.மு.க - பா.ஜ.க இடையே கடந்த சில நாட்களாக நடந்துவந்த தொகுதிப் பங்கீடு குறித்த பேச்சுவார்த்தை - நேற்றுமுன்தினம் சுமுகத் தீர்வுக்கு வந்தது. மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஜெயலிலதாவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதும் தொகுதிப் பங்கீடு தொடர்பான உடன்பாடு ஏற்பட்டது.

இந்த நிலையில், இன்று பா.ஜ.க போட்டியிடும் தொகுதிகளை அ.தி.மு.க அறிவித்துள்ளது. இதில் நீலகிரி, கோவை, நாகர்கோவில் தொகுதிகள் கடந்தமுறை பா.ஜ.க வென்றவையாகும். அந்தத் தொகுதிகள் திரும்பத் தரப்பட்டுவிட்டன.

எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே திருநாவுக்கரசரின் புதுக்கோட்டைத் தொகுதி பா.ஜ.கவுக்கு வழங்கப்படவில்லை.

அ.தி.மு.க அறிவித்துள்ள தொகுதிகளில் பா.ஜ.கவுக்கு அதிர்ச்சி தரும் சில தொகுதிகளும் உள்ளன. வடசென்னை, சிதம்பரம், தர்மபுரி, பாண்டிச்சேரியில் பா.ஜ.கவுக்கு சற்றும் வெற்றிவாய்ப்பு இருக்காது என்று கூறப்படுகிறது. கடந்த முறை தி.மு.க கூட்டணியில் பா.ஜ.க 6 தொகுதிகளில் போட்டியிட்டது.

இப்போது பா.ஜ.கவுக்கு ஒதுக்கப்பட்ட இந்த 7 தொகுதிகள் தவிர மற்ற 33 தொகுதிகளும் அ.தி.மு.க போட்டியிடுகிறது.

இதன் மூலம் தமிழகத்திலேயே இந்தத் தேர்தலில் அதிக இடங்கில் போட்டியிடும் கட்சி அ.தி.மு.கதான். தி.மு.க வெறும் 15 இடங்களில்தான் போட்யிடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## மருதங்கேணி கோட்டம் இடமாற்றம்

(மருதங்கேணி)

மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் இயங்கி வந்த மருதங்கேணி கோட்டக்கல்வி அலுவலகம், தாளையடி - மருதங்கேணி வீதியில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அண்மையில் மாற்றப்பட்டுள்ளது.

பளைப்பகுதியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது இடம்பெயர்ந்து, இதுவரை காலமும் மருதங்கேணி பாடாசாலையில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (17)

# வன்னி தேர்தல் தொகுதியில் வாக்களிக்க 2 லட்சத்து 26 ஆயிரத்து 604 பேர் தகுதி

வன்னி தேர்தல் தொகுதியில் எதிர்வரும் தேர்தலில் வாக்களிப்பதற்கு - 2 லட்சத்து 26 ஆயிரத்து 604 பேர் தகுதி பெற்றிருப்பதாக வன்னித் தேர்தல் அலுவலகம் தெரிவித்தது.

இதில் - வவுனியா மாவட்டத்தில் ஒரு லட்சத்து 185 பேரும், மன்னார் மாவட்டத்தில் 22 ஆயிரத்து 980 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 53 ஆயிரத்து 439 பேரும் தகுதி பெற்றிருப்பதாக வன்னித் தேர்தல் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இவர்களில் 21 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்துள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வன்னித் தேர்தல் தொகுதியில் 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவிருக்கிறார்கள் என்றும், தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாகப் போட்டியிடுபவர்கள் பற்றிய முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், தொகுதிப் பங்கீட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு 3 வேட்பாளர்களும், ரெலோ சார்பில் 3 வேட்பாளர்களும், தமிழ் காங்கிரஸ் சார்பாக 2 வேட்பாளர்களும், ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணி சார்பாக ஒருவரும் இடம்பெறுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய விவகார அமைச்சின் யாழ்.மாவட்ட பிராந்திய அலுவலகம் நடாத்தும் 66 ஆவது தொடர் ஆன்மீகச் சொற்பொழிவு நாளை வெள்ளிக்கிழமை நல்லூர் ஆலய முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்து சமய விவகார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர் கா.கமலநாதன் - வீபூதியின் மகிமை பற்றி சொற்பொழிவாற்றுவார்.

# மதுபானம் சிகரெட் விற்பனை யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பு

## மதுவரி அத்தியட்சகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய மதுசாரம், சிகரெட் விற்பனை யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ளதால், பாவனையாளர்கள் அவற்றை அவதானித்துப் பாவனையை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் ஜோசப் கிறிஸ்ரி தெரி[illegible]ார்.

தென்னிலங்கையில் சட்ட விரோதமாகவும், கலப்படத்துடன் கூடிய வகையிலும், வர்த்தக லாபம் கருதி உற்பத்தி செய்யப்படும் மதுசாரம், மற்றும் புகைத்தல் பொருட்களான பீடி, சிகரெட் போன்றன தற்போது வடபகுதியிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.


இவற்றைக் கட்டுப்படுத்துவதில் நாம் தீவிரமாகச் செயற்படத் தொடங்கியுள்ளோம். எனினும், அவ்வாறு விற்பனை செய்யப்படும் பொருட்கள் ஏதோ ஓர் வகையில் விற்பனை செய்யப்பட்ட வண்ணமே உள்ளன.

இவற்றால் புற்றுநோய், சுவாசப்பை நோய்கள் உட்படப் பல்வேறு நேய்கள் தோன்றும் அபாயம் உள்ளது.

கடந்த வருடம் சுமார் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான உடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய சட்டவிரோதமான முறையில் உற்பத்தி செய்யப்பட்ட சிகரெட் மற்றும் பீடிகள் - யாழ்.நகரப் பகுதியில் எம்மால் கைப்பற்றப்பட்டிருந்தன.

இதேபோல், கலப்படம் செய்யப்பட்ட மதுபானப்பொருள் விற்பனையும் அதிகரித்திருப்பதாகத் தெரியவருகிறது. இவற்றிற்குப் பிரதான காரணம் - பதிவு செய்யப்படாத ஏராளமான ரெஸ்ட்ரோரண்ட்களும், மதுபான விற்பனை நிலையங்களும் இயங்கி வருகின்றமையேயாகும்.

இவற்றின் மீதான எமது இறுக்கமான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன. மதுவரி ஆணையாளரால் கடந்த வாரம் விடுக்கப்பட்டிருக்கும் அறிவித்தலின்படி- சட்டவிரோதமான முறையில் உற்பத்தி செய்யப்படும் சிகரட் மற்றும் பீடி முதலியவற்றை வைத்திருப்போர், உற்பத்தி செய்வோர் மற்றும் எடுத்துச்செல்வோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படத் தொடங்கியுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)



சந்நிதியான் ஆச்சிரமத்தில் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மாணவி ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி அன்பளிப்பாக வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம். (17)

# மீளக்குடியமர்ந்த மக்களுக்கு தென்னங்கன்றுகள் விநியோகம்

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வடமராட்சி கிழக்குப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு - மூவிமொண்டே நிறுவனம் தென்னங் கன்றுகளையும், மரமுந்திரிகை கன்றுகளையும் வழங்கியது.

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 10 கிராம சேவை அலுவலர் பிரிவிலுள்ள மீளக்குடியமர்ந்த மக களுக்கு - ஒரு குடும்பத்திற்கு தலா 7 தென்னங்கன்றுகளும், 7 மரமுந்திரிகைக்கன்றுகளும் வழங்கப்பட்டுள்ளன. (17)

# சட்டவிரோத கசிப்பு உற்பத்தியாளரிடம் இரண்டு இலட்சம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத கசிப்பு உற்பத்தி வழக்கில் இருவருக்கு ஐந்து லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

உரும்பிராயைச் சேர்ந்த ஒருவருக்கும, ஊரெழுவைச் சேர்ந்த ஒருவருக்குமே இந்த அபராதப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது -

கடந்த வாரம் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள், கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்களை வைத்திருந்தார்கள் எனறு தெரிவித்துப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இவர்கள், நேற்று யாழ்.மாவட்ட நீதிமன்றில் நிறுத்தப்பட்டபோது, மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜாவினால் 5 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

ஒருவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதால் 2 வருட சிறைத் தண்டனையும் 2 லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

இரண்டாவது குற்றவாளி தனது குற்றத்தினை ஒப்புக்கொள்ள மறுத்தமையால் - 1 லட்சம் ரூபா காசுப் பிணையிலும், 2 லட்சம் ரூபா அரச ஊழியர் பிணையிலும் செல்லுமாறு அனுமதிக்கப்பட்டார். (ப)

## வலி.வடக்கிலிருந்து

# இடம்பெயர்ந்தோரின் விபரங்களை சமர்ப்பிக்க யாழ்.மாவட்ட படைத்தளபதி கோரிக்கை

வலி.வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த மக்களை மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கு இராணுவத்தரப்பால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வலி.வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து வாழும் மக்களை - அவர்களின் சொந்த இடங்களில் குடியமர அனுமதிப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் 10.30 மணிக்குத் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி சுசில் சந்திரபால - வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்.குடாநாட்டில் வாழும் அனைத்துக் குடும்பங்களினதும் முழுமையான விபரங்களை, எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பு தம்மிடம் ஒப்படைக்கும்படி பிரதேச செயலரைக் கேட்டுக்கொண்டதுடன், இந்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்புத் தரமறுக்கும் உத்தியோகத்தர்கள் பற்றிய விபரத்தை தனக்குத் தெரியப்படுத்தும்படியும் தெரிவித்தார்.

மேலும், இராணுவ தளபதியின் இந்த வேண்டுகோளையடுத்து வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த குடாநாட்டின் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் வாழும் மக்களின் முழுமையான விபரங்களைத் திரட்டும் பணிக்கான வேலைகள் நேற்றே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் - கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் - பிரதேச செயலகங்கள் தோறும் சென்று விபரங்களை திரட்டுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தக் கலந்துரையாடலில் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள படை அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (68)



யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறைக்கு வருகை தந்த நோர்வே பல்கலைக்கழக பேராசிரியர் கிறிஸ்ரியன் ரெக்கி யாழ்.மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் இளம்பரிதியைச் சந்தித்து உரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# யாழ்.நீதிமன்றம் தரம் உயர்ந்தது !

யாழ்.மாவட்ட நீதிமன்றத்தை - நீதி நிர்வாகசேவையில் "ஏ" தரத்துக்கு உயர்த்தி இருப்பதாக நீதி நிர்வாக சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

புதிய நடைமுறைப்படி யாழ். நீதிவான் நீதிமன்றத்தையும், யாழ். மாவட்ட நீதிமன்றத்தையும் ஒன்றாக இயங்கச் செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

இந்த நடைமுறைக்கமைய - யாழ். மாவட்ட நீதிவானாக ஆர்.ரி.விக்னராஜாவும், நீதிவான் நீதிமன்ற நீதிபதியாக ஸ்ரீநிதி நந்தசேகரனும் பணியாற்றுவார்கள். முன்னர் இந்த நீதிமன்றங்கள் தனித்தனியாக இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

# பளை நகரப் பிரதேசத்திற்கு குழாய்நீர் வழங்க நடவடிக்கை

25 லட்சம் ரூபா செலவில் பளை நகரப் பிரதேசத்திற்கு குழாய்மூலம் நீர் வழங்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பளை நகரிலிருந்து பளை பேருந்து நிலையம்வரை நிலத்தின் கீழான குழாய்மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீர்ப் வேலைத்திட்ட பொறியியலாளர்கள் இந்தப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர். உள்ளூராட்சி திணைக்களம் வேலை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. (17)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : வி.தனஷ்ரிகா
முகவரி : சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

நான்காவது அகவையில்



பெயர் : சி.அருள்ராஜ்
முகவரி : 'அன்பு பவனம்' மந்துவில்.




# எங்கள் இடத்துக்கு அனுமதித்தால் தொழிலைச் சிறப்பாகச் செய்யலாம்

உங்களின் தொழில்... அது சம்மந்தமாக ஏற்பட்ட விருப்பு, வெறுப்புக்கள் இலாபநட்டங்கள் பற்றி சொல்லுங்களேன் என்றதும் சொல்ல ஆரம்பித்தார்.

எனது பெயர் சோமசுந்தரம் புவனேந்திரன் - தெல்லிப்பளை மாவிட்டபுரம் தெற்கு நிரந்தர முகவரியில் 1991 ஆம் ஆண்டு வரை வசித்துவந்தேன். அதன்பின்பு இடம் பெயர்ந்து இப்போது அத்தியடியில் வாடகை வீடொன்றில் வசித்துவருகின்றேன்.

தெல்லிப்பளையிலிருந்த காலப்பகுதியில், மாவை கைத்தொழில் நிலையம் ஒன்றினை அதேயிடத்தில் இயக்கிவந்தேன். 1977 இல் ஆரம்பித்து 1992 ஆம் ஆண்டு வரை இயங்கி வந்தது. தற்போது சொந்தமாக பலசரக்குக் கடை ஒன்றை வைத்து வியாபாரம் செய்துவருகிறேன்.

ஆரம்பத்தில் பிற நிறுவனங்களில் வேலை செய்வது எனக்குப்பிடிக்கவில்லை. சொந்தமாக ஒரு தொழிலை மேற்கொள்ளத்திட்டம்போட்டு, மாவை கைத்தொழில் நிலையம் ஒன்றினை ஆரம்பித்து, 12 தொழிலாளர்களைக்கொண்ட இந்த கைத்தொழில் நிலையத்தில் முழுவதும் பெண்கள் வேலை செய்து வந்தார்கள். ஏனெனில், செய்யப்பட்டு வந்த கைத்தொழில் பொருட்களாக கற்பூரம், ஊதுபத்தி, மோர்மிளகாய், அப்பளம் போன்ற உள்ளூர் உற்பத்திகளாகும். எனது மனைவியை இயக்குநராக பணியாற்ற அனுமதித்தேன். நல்லதொரு தொழிலாக இருந்து வந்ததால், எங்களுக்கொரு கஷ்டமும் ஏற்படவில்லை. ஆரம்பத்தில் இருந்தே சிறுகைத்தொழில் குறைவாகவே காணப்பட்டதால், உற்பத்தி செய்யும் பொருட்கள் அனைத்தும் கூடுதலாகவே அழிந்தன. இதனால் கூடிய இலாபம் ஏற்பட்டது.

வேலையிலிருந்த அனைத்துப்பெண்களும் தொழிலை தெரிந்துகொண்டு என்னிடம் வேலைக்கு வரவில்லை. ஆர்வத்துடன் வந்தார்கள். வேலைக்கு வந்த பிறகே அவர்கள் எல்லோரும் நன்றாகவே கற்றுக்கொண்டார்கள். இதுதான் அதுதான் வேலை என்றில்லாமல் எல்லாப் பொருட்களையும் தனியே உற்பத்தி செய்யப்பழகிக்கொண்டார்கள்.

அந்தந்தக் காலப்பகுதியில் வெளியிடங்களிலிருந்து சிறுகைத்தொழிலினை மேற்கொண்டு அதில் தேர்ச்சியும் பெற்றனர். யாழ்ப்பாணத்துக் கடைக்காரர்களும் நமது ஊரிலுள்ள உற்பத்திப்பொருட்களைவாங்கி, விற்பனைசெய்யும் நாட்டம் கொள்ளாமல் வெளியிடங்களிலிருந்து பொருட்களை வாங்கி விற்பனை செய்வதில்தான் கூடுதலான நாட்டம் உள்ளவர்களாகவே காணப்படுகின்றார்கள்.



இவர்கள் இடையே மாற்றம் ஏற்படின், இந்த மண்ணில் பெரிதாக உற்பத்திப் பொருட்கள் அனைத்தும் வருவதில்லை. இங்கே உற்பத்திசெய்து பெருமளவிற்கு விற்கக்கூடிய நிலை இருந்தது. இலகுவில் விற்க்கக் கூடியதாகவும் இருந்ததால், எனக்கு இந்தத் தொழிலில் பிடிப்பு ஏற்பட்டது.

ஆரம்பத்தில் கடைகளுக்கு நாங்கள்தான் கொண்டுசென்று பொருட்களை விற்பனை செய்து வந்தோம். பின்பு அவர்களே எங்களைத் தேடி வந்ததுண்டு. 1992 ஆம் ஆண்டு வரை தொடர்ந்த இந்தத் தொழிலானது, பின்பு போர்ச்சூழல் ஏற்பட்டவேளை வெடிச்சத்தங்களும், செல்வந்து அடிக்கடி விழுந்தமையால் தொழிலை மேற்கொள்ள முடியாமல், அப்படியே எனது சொத்துக்களையும், தொழிலையும் விட்டுவிட்டு இடம்பெயர்ந்தேன்.

இராணுவத்திற்கு இன்றுவரை எமது இடம் பாதுகாப்பு வலையமாக இருக்கின்றது. இடம்பெயர்ந்ததால் மறுபடியும் தொடர்ந்து தொழிலை மேற்கொள்ளமுடியாத நிலையுள்ளது. இதற்குப் பல காரணங்கள் உண்டு.

அதாவது, வெளியிடங்களிலிருந்து நிறைய பல பொருட்கள் இங்கே வந்ததாலும் - மேல் உறைகள் பல படிவங்களாக வந்ததாலும் விளம்பரப் பலகைகள் சந்திக்குச் சந்தி தொங்கிக் காணப்படுவதாலும், மக்கள் அப்படியான பொருட்களைத்தான் விரும்பி வாங்குகிறார்கள்.

தரமில்லாத போலிப் பொருட்களை வாங்கி, மக்கள் ஏமாறும் நிலை இன்று உள்ளது. அன்றைய காலகட்டத்தில் பொருட்களுக்கு விளம்பரம் பெரிதாகக் கிடையாது. பொருட்களின் மேலுறைகள் அழகாக வடிவமைப்பதற்கேற்ற தொழில்நுட்ப வசதிகள் காணப்படவிலலை.

ஆனால், உறுதியான பொருட்களாகவே அதாவது தரமான பொருட்களாகவே இருந்து வந்தது. இதனால் நம் மக்கள் தேவைக்கேற்ப நிறைய சிறுகைத்தொழில் நிலையங்கள் அமைத்து, உள்ளூர் உற்பத்திப் பொருட்களை உற்பத்திசெய்யும் அளவிற்கு மக்களை தூண்டிவிடமுடியும். அதாவது இந்த மண்ணில் உற்பத்தி செய்யும் பொருட்களைக் கூடுதலாக கொள்வனவு செய்வார்களாயின் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும்.

பாதை திறந்ததுதான் அதாவது, உள்ளூர்ப் பொருட்களை உற்பத்தி செய்பவர்களுக்கு பெரும் பிரச்சினையாக இருக்கிறது. என்னைப்போல பலபேர் சிறுகைத்தொழிலை மேற்கொண்டு வந்திருந்தார்கள். இடையில் தடைப்பட்டு, மீளமுடியாமல் இருக்கும் தொழிலாளர்கள் நிறையவே இங்கே இருக்கின்றார்கள். இதற்கெல்லாம் காரணம் வெளியிடங்களிலிருந்து வரும் உற்பத்திப் பொருட்களேயாகும்.

நான் இப்பொழுது பலசரக்கு கடை ஒன்றினை நடத்தி வருகின்றேன். இதில் எனக்கு விருப்பமில்லை. என்ன செய்ய ஏதாவது ஒரு தொழில் செய்யவேண்டும். என்பதற்காகத் தொடர்கின்றேன். இந்தத் தொழிலுக்கும், அந்தத் தொழிலுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கின்றது. வெளியிடங்களிலிருந்து, பொருட்களை கொள்வனவுசெய்து விற்பனை செய்வதால் மனதில் பல அழுத்தங்கள் ஏற்படுகின்றன.

இராணுவத்தின் பாதுகாப்பு வலயமான இடத்தில் எனது தொழில் நிலையம் அமைந்ததால், இன்றுவரை உள்ளே சென்றுபார்க்க அனுமதிப்பதில்லை. எப்பொழுதுதான் எங்களை எங்களுடைய இடத்திற்கு விடுவார்கள் என்று தெரியவில்லை.

மறுபடியும் நாங்கள் எங்களுடைய இடத்திற்கு சென்றால், மீண்டும் விடுபட்ட இந்தத் தொழிலினை ஆரம்பித்து, நமது சமூகத்தில் பிற இடங்களிலிருந்துவரும், உற்பத்திப்பொருட்களிலிருந்து வித்தியாசப்படுத்திக் காட்டக்கூடிய திறமை என்னிடம் இருக்கின்றது.

எங்களுடைய இடத்தில் எங்களுடைய சமூகத்திலுள்ள மூலப்பொருட்களை எடுத்து பயன்படுத்தி, உற்பத்தி செய்வதால் ஒரு பெருமை இருக்கின்றது. பாதை திறந்து சமாதானம் தொடருமா அல்லது இடையில் முறியுமா தெரியாது. ஆனால், வெளியிடங்களில் தேங்கிக்கிடந்த பல உற்பத்திப்பொருட்களை இங்கே கொண்டுவந்து விற்பனை செய்வதால், பிற இடங்களிலுள்ள அனைத்து நிறுவனங்களும் முன்னேற்ற கரமாக இயங்கிவருகின்றது. இதனைப் பார்க்கும்போது எங்களுக்கு கவலையழிக்கிறது.

**நேர்காணல் - செல்வா**

---

## தொழில் வங்கி



| நிறுவனம் | குடிபெயர்வுக்கான சர்வதேச அமைப்பு | வர்த்தகரீதியான சமைத்த உணவு வழங்கப்படும் கம்பனி |
|---|---|---|
| வெற்றிடமாக உள்ள பதவிகள் | திட்டமிடல் | 1. கணக்கு லிகிதர் 2. உதவி களஞ்சியக் காப்பாளர். 3. சமயலறை உதவியாளர் 4. பாதுகாவலர் |
| அடிப்படைத் தகுதி | பல்கலைக்கழக பட்டதாரி அல்லது அதற்கு சமமான கல்வியும் அனுபவமும், 3 வருட அனுபவமும். | க.பொ.த உயர்தரம் திறமைச் சித்திகள், க.பொ.த உயர்தரம், க.பொ.த சாதாரணம் சித்தி. 10 ஆம் வகுப்புவரை கல்வி கற்றவர். |
| விண்ணப்ப முடிவு திகதி | 29.02.2004 | ஒரு வாரத்திற்குள் விண்ணப்பிக்கலாம் |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

---

## கலை பற்றி லெனின்

கோடான கோடியாகவுள்ள மக்கள் தொகையில், ஒரு சில ஆயிரம் பேருக்கு கலை எத்தகையதாக இருக்கிறது என்பது, அத்தனை முக்கியமானதல்ல. கலை மக்களுக்கே உரியது. அதன் வேர்கள் உழைக்கும் வெகுஜனங்களின் மத்தியில் ஆழமாக வேரூன்றியிருக்கவேண்டும். வெகுஜனங்கள் அதைப் புரிந்துகொள்ளவேண்டும். நேசிக்கவேண்டும்.

அது அவர்களை ஒன்றுபடுத்தவேண்டும். அவர்களது உணர்ச்சிகளையும், எண்ணங்களையும், மனோ உறுதியையும் மேலோங்கச் செய்தல்வேண்டும். அவர்களுக்குள் குடிகொண்டுள்ள கலைத் திறமையை அது இயங்குமாறு தூண்டிவிடவேண்டும். தொழிலாளி மக்களுக்கும், விவசாய மக்களுக்கும் கறுப்பு ரொட்டி தேவைப்படும்போது, நாம் ஒரு சிறுபான்மையினருக்கு அருமையான இனிப்புக் கேக்கைப் பரிமாறிக்கொண்டிருக்கமுடியுமா?


எழுத்துக்கு எழுத்து அப்படியே புரிந்துகொள்வதோடு மட்டுமல்லாது, உருவகமாகவும் புரிந்துகொள்ளவேண்டும். நாம் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் நாம் கண்முன் எப்போதும் கொண்டிருக்கவேண்டும். அவர்களுக்காகவே செயற்படப் புரிந்துகொள்ள நாம் கற்றுக்கொள்ளவேண்டும்.

இது கலை, கலாசாரத்துக்குப் பொருந்தும்.

---

## வாரம் ஒரு சிறுதொழில்

### தோடம்பழ ஜாம்



தோடம்பழம் அதிகமாகக் கிடைக்கும் காலத்தில்தான், தோடம்பழ ஜாம் தயாரிக்க முடியும். அழுகாத, நன்றாகப் பழுத்த பழங்களின் மேல் தோல்களைக் கொண்டுவந்து, அதன் உட்புறமுள்ள வெண்ணிறமான மெல்லிய தோலை எடுத்து, நன்றாகக் கழுவி, ஒரு பாத்திரத்தில் போட்டு, ஒரு டம்ளர் தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து ஒரு தடவை ஆவி வந்ததும், பாத்திரத்தை இறக்கி வைத்து ஆறியபின் அம்மியில் அல்லது மிக்ஸியில் வைத்து, முழுவதுமாக அரைத்துவிடாமல், கொஞ்சமாக அரைத்து எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து தேவைகேற்ப சீனியை அதில்போட்டு ஒன்றரை டம்ளர் தண்ணீர்விட்டு, சீனி கரைந்துவரும் சமயம், சர்பத் சோடா கலர், மிட்டாய் இவைகளுக்கு சேர்க்கும் நீரில்கரையும் நிறத்தில், தோடம்பழ நிறத்தை இதில் தேவையான அளவு சேர்த்து, நன்றாகக் கலக்கிவிட்டு, அரைத்து வைத்திருக்கும் தோடம்பழத் தோலை இதில்போட்டு, நன்றாகக் கலந்து கழித்தன்மை வந்தவுடன் இறக்கி, ஆறவைத்து, சோடா கலருக்குப் பயன்படுத்தும் தோடம்பழ எஸன்ஸில் 10 துளிவிட்டு நன்றாகக் கிளறி, கரண்டியினால் எடுத்து போத்தலில் போட்டு, லேபிள் ஒட்டி விற்பனைக்கு அனுப்பலாம்.




# தேங்காய்த்துருவல் கைத்தொழிலானது எமது நிலையான கைத்தொழில் துறையில் ஒருபாகமாகவுள்ளது

**தே**ங்காய்த்துருவல் கைத்தொழிலின் உப தயாரிப்புகள், குறிப்பாக சிரட்டைக்கரி, தேங்காய்ப்பூ என பன நாட்டின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கின்றன. சிரட்டைக்கரி ஏற்றுமதி செய்யப்படுவதுடன், தேங்காய்ப் பூவிலிருந்து பெறப்படுகின்ற எண்ணெய் - பிரதானமாக சவர்க்காரம் தயாரிக்கப் பாவிக்கப்படுகின்றது.

மேலும் இதிலிருந்து பெறப்படுகின்ற பிண்ணாக்கு - கோழி, கால் நடைகளுக்குத் தீனியாகப் பயன்படுகின்றது. தேங்காய்த் துருவல் கைத்தொழிலுடன் இணைந்த பிறிதொருதுறை - தும்புக் கைத்தொழிலாகும். சில பிரதேசங்களில் தும்பு ஆலைகள், தேங்காய்த் துருவல் உற்பத்திப் பிரதேசங்களில் அமைந்துள்ளன.

தேங்காய்த் துருவல் உற்பத்திக்குப் பாவிக்கப்பட்ட மட்டைகள், தும்பு ஆலைகளில் பல இனத்தும் பாக மாற்றப்படுகின்றன. இதில், உள்ளூர் கைத்தொழிலில் பாவிக்கப்படும் ஒருசிறுபகுதி தவிர, பெரும் பகுதி ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

தேங்காய்த்துருவலுடன் இணைந்த மற்றுமொரு உற்பத்திப்பொருள் கொப்பராவாகும்.



ஏற்றுமதிக்கான தேங்காய்த் துருவல் மிக உயர் தரமுடையதாக விருத்தல் வேண்டுமென்ற தெங்கு பதப்படுத்தல் சபையின் விதி காரணமாக, தயாரிப்பதற்கென கொள்வனவு செய்யப்படுகின்ற காய்கள் அனைத்தும் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுவதில்லை.

முளைவிட்ட, வெடித்த, அழுகக் கூடிய காய்கள் - கழிவுகளாக ஒதுக்கப்படுவதுடன், ஆலைகளில் குவிக்கின்ற இந்தக் கழிவுகள், தினந்தோறும் கொப்பரா, எண்ணெய் என்பன தயாரிக்க அனுப்பப்படுகின்றன.

கழிவுக் காய்கள் - துருவல் என்பனவற்றிலிருந்து பெறப்பட்ட கொப்பராவைப் பதப்படுத்தவென, பெரும்பாலான தேங்காய் துருவல் ஆலைகளில் எண்ணெய் ஆலையொன்று நிறுவப்பட்டுள்ளது. துருவலைப் போலன்றி, கொப்பரா இலக்கம் 1, இலக்கம் 2 என தரப்படுத்தப்பட்டுள்ளது.

முதலாம் இலக்க கொப்பராவிலிருந்து வழங்கப்பட்ட எண்ணெய் - ஏற்றுமதிக்கோ அல்லது உள்ளூர் நுகர்விற்கோ பாவிக்கப்படுகின்றது. இரண்டாம் தரத்திலிருந்து பெறப்படும் எண்ணெய், நுகர்விற்கு உள்ளூர்ச் சந்தைகளில் விற்கப்படுவதுடன், சிலசமயங்களில் சவர்க்கார உற்பத்திக்கும் பாவிக்கப்படுகின்றது.

பிறிதொரு துணைத் தயாரிப்பு தேங்காய்த் தண்ணீரிலிருந்து பெறப்படுகின்றது. ஒரு தொட்டியில் சேமிக்கப்படுகின்ற இந்த நீர் - சிலவாரங்களுக்குப் படியவிடப்படுகின்றது. பின்னர், நீரில் மிதக்கும் எண்ணெய் - சிறு சவாக்கார உற்பத்தியாளர்களால் பாவிக்கப்படுவதுடன், 'படிவுப் பிண்ணாக்கு' என அழைக்கப்படும். இதன் கழிவு கோழிக்கு உணவாகப் பாவிக்கப்படுகின்றது.

தேங்காய்த் துருவலில் துணை உற்பத்திகள் பொருளாதாரத்தைப் பெரும் பங்களிப்பினைச் செய்வதுடன், தேங்காய்த் துருவல் ஆலைகள் அமைந்துள்ள பிராந்தியங்களில் உருவாக்கத்துக்கும் அவை காரணமாக அமைகின்றன.

தேங்காய்த் துருவல் கைத்தொழிலானது, எமது நிலையான கைத்தொழில் துறையின் ஒரு பாகமாக மாறியுள்ளது. தேங்காய் துருவல் கைத்தொழில் குறிப்பிடத்தக்களவு நிலையான வெளிநாட்டுச் செலாவனியை உழைப்பது இதில் பிரதானமானதாகும்.

வெளிநாட்டுச் செலாவனி உழைபபில் இதன் நேரடிப் பங்களிப்பு இருந்தவண்ணமேயுள்ளன. மேலும் உப உற்பத்திப் பொருள்களும் கணிசமானளவு வருமானத்தைப் பெற்றுத் தருகின்றன.

சிரட்டைக்கரி, தும்பு, எண்ணெய், கொப்பரா என்பனவும் நாட்டின் வெளிநாட்டுச் செலாவனி உழைப்பில் குறிபபிடத்தக்களவு பங்கினைக் கொணடுள்ளன.

இந்தக் கைத்தொழில்களை உள்ளடக்கிய பிரதேசம் 'நிறை தொழில் மட்டம்' நிலவுகின்ற பிரதேசமாகக் கணிக்கப்படுகின்றது.

பல்வேறுபட்ட சமூக - பொருளாதார நலன்களைப் பயக்கும் தேங்காய்த்துருவல் கைத்தொழில் கூடிய கவனத்தை வேண்டி நிற்கின்றது.

தேங்காய் உற்பத்தி வீழ்ச்சியடைந்து வருவதாகவும் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

காய் உற்பத்தி வீழ்ச்சி, தேங்காய்த்துருவல் ஏற்றுமதி வீழ்ச்சிக்குக் காரணமாக அமைகின்றது. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட காலப் பிரிவில், சந்தை விலைகள் உயர்ந்து செல்லும் அதேவேளையில், காய் உற்பத்தியிலும் ஏற்பட்டுவரும் வீழ்ச்சிப்போக்கை அவதானிக்க முடிகின்றது.

உலகச்சந்தை நிலைமை தேங்காய்த் துருவல் வர்த்தகத்திற்கு நம்பிக்கையளித்து வருகின்றபோதும், உள்ளூர் உற்பத்தி உலகக் கேள்வியை நோக்கித்திருப்பப்படாமலும், மூலவளங்கள் பயன்படுத்தப் படாமலும் உள்ளன.

அதிகரித்து வருகின்ற உலகக் கேள்வியைச் சமாளிக்கவும், போட்டிச் சந்தையில் எமது வெளிநாட்டுச் செலாவனி உழைப்பினை அதிகரிக்கவும் வேண்டி, எதிர்வரும் வருடங்களில் தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பதன்மூலம், ஆலைகளுக்கும் கைத்தொழிலிற்கான தேங்காய்களை வழங்குதல் வேண்டும்.

மட்டுப்படுத்தப்பட்ட மூலவளங்களுக்குள் கூடியவிளைச்சலைக் கொண்ட, செறிவான பயிர்ச் செய்கையை மேற்கொள்வதன்மூலம் உற்பத்தியை அதிகரிக்கலாம்.

## சில தொழில் நுணுக்கப் பயிற்சிகள்

**கா**லத்திற்கு ஏற்ப நவீன நுணுக்கத் தொழில்களில் ஏதாவது ஒனறில் பயிற்சியும், திறமையும் பெறுவது இந்த நாளில் வேலை வாய்ப புக்கும், சம்பாதிப்பதற்கும் பேராதரவாக இருக்கின்றது.

உதாரணமாக - ரேடியோ, டிரான்ஸிஸ்டர் பழுதுபார்த்தல் தொலைக்காட்சி பழுதுபார்த்தல், டேப்ரிக்கார்டர், ரெக்கார்டு பிளேயர் பழுது பார்த்தல், குளிர் சாதனங்களைப்பழுது பார்த்தல் , கார், மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் போன்றவற்றைப் பழுதுபார்த்தல், மோட்டார் இயந்திரங்கள் பழுது பார்த்தல் போன்ற சிலவற்றைக் குறிப்பிடலாம்.

மேல் குறித்த தொழில்கள் மக்களின் அன்றாட வாழ்க்கையோடு பல வகையிலும் தொடர்புடையனவாகும். வானொலிப்பெட்டி, டிரான்சிஸ்டர், தொலைக்காட்சி போன்றவற்றைப் பழுதுபார்த்துச் சரிசெய்ய நமக்குத் தெரியும் என்று வைத்துக்கொள்வோம். இன்று நகர்ப்புறத்திலும், கிராமப்புறத்திலும் அநேகமாகப் பெரும்பான்மையான வீடுகளில் வானொலிப்பெட்டி அல்லது டிரான்சிஸ்டர் இருப்பது கண்கூடானவிடயம்.

நாம் இருக்கும் எல்லைக்குள் அன்றாடம் குறைந்தபட்சம் ஒரு ரேடியோ அல்லது டிரான்ஸிஸ்டர் பழுதாகாமல் இருப்பது இல்லை. அவறறை பழுதுபார்க்கும் பொறுப்பை நாம் மேற்கொள்ளும்போது வருமானம் கிடைக்கின்றது.

அண்மைக்காலத்தில் வசதி படைத்தவர்கள் வீடுகளில் எல்லாம் தொலைக்காட்சிப் பெட்டிகள் காணப்படுகின்றன. நமக்கென்று சில வாடிக்கையாளர்களை நிர்ணயித்துக் கொள்வதன்மூலம் தொலைக்காட்சிப் பெட்டிகளை அடிக்கடி பழுது பார்ப்பதன் மூலம் கணிசமான வருவாயைப் பெறமுடியும். மேற்கண்ட தொழில்களில் பயிற்சி பெற்றால், நல்ல வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்பது சரி. பயிற்சி பெறுவதற்கான வசதி வாய்ப்புக்கள் போதியளவு இருக்கின்றதா என்பது ஒரு நியாயமான கேள்வி. அரசாங்க சார்பில் பெரிய நகரங்களில் தொழில் நுணுக்கப் பள்ளிகள் இருந்தாலும், அவற்றில் கல்வி முடித்த இளைஞர்கள் அத்தனை பேருககும் இடமளிக்கமுடிவதில்லை. இது ஒரு பிரச்சனைதான். அரசாங்க தொழில்நுட்பப்பள்ளியில் பயிற்சி பெற்றவர்கள்தான் அரச தொடர்புடைய நிறுவனங்களிலும், தனியார் தொழில் நிறுவனங்களிலும் சட்டரீதியாக தொழில் ஆற்ற முடிகிறது.

ஆனால், சொந்தமாகச் செய்வதற்குத் தனிப்பட்ட முறையில் தனியார்களிடம் பயிற்சி பெற்றாலே போதும். தனிப்பட்ட முறையில் பயிற்சி பெறுவதற்கு இரண்டு வழிமுறைகளைக் கையாளலாம்.

1. ஏற்கனவே தொழில் செய்து கொண்டிருக்கும் தனியார் தொழில் நிறுவனங்களின் பயிற்சியாளராகச் சேர்ந்து பயிற்சி பெறலாம்.

2. தனிப்பட்ட நிறுவனங்கள் நடத்தும் தொழிற்கல்வி நிலையங்களில் நேரிலோ, தபால் மூலமோ பயிற்சி பெற்று, பின்னர் தொழில் நடத்தலாம்.

தனிப்பட்ட நிறுவனத்தினர் நடத்தும் தொழிற் பள்ளிகள் கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற நகரங்களில் பல உள்ளன. அவரவருக்குத் தெரிந்த அல்லது கேள்விப்பட்ட தொழில் நிறுவனங்களில் சேர்ந்து பயிற்சி பெறலாம்.

## தேசிய பயிலுநர் தொழில் பயிற்சி அதிகாரசபை
## மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் பயிற்சி அமைச்சு
## நீங்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில்வாய்ப்பைப் பெறுவதற்கான தொழிற் பயில் நிலைப் பயிற்சி

இந்தத் தேசிய பயிலுநர்க் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை என்பது, தொழிற்பயிற்சியை அளிக்கும் பிரதான இடத்தை வகிக்கும் ஒரு பயிற்சி நிறுவனமாகும். தொழிற்பயிற்சிக் காலத்தில் பயிற்றுநர் தேர்ச்சிபெற்ற தொழில்நுட்பவியலரின் கீழ், தொழிற்சாலை, வேலைத்தளம் அலுவலகம் ஆகியவற்றில் இணைக்கப்பட்டு, பயிற்சியைப் பெறுவதால் வேலைவாய்ப்படையும் விகிதம் அதிகமாகும். இதுபோலவே (NAITA) அதிகாரசபை அளிக்கும் சான்றிதழுக்கும் சர்வதேச அங்கீகாரம் உள்ள பயிற்சியைப் பூர்த்திசெய்த அநேகர், வெளிநாட்டில் தொழிலையும் பிரஜாவுரிமைகளையும் பெற்றுள்ளனர்.

இந்தப் பயிற்சி நெறிக்குப் பாடசாலையை விட்டு விலக்கிய 16-25 வயதுடைய இளைஞர், யுவதிகளிடமிருந்து, தொழிற்பயிற்சி விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

க.பொ.த.சாதாரண தரத்தில் தாய்மொழி, கணிதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தி பெற்றிருந்தால் போதுமானதாகும். இதனைவிட 8 ஆம், 9 ஆம் வகுப்புக்களில் சித்தியெய்தியவர்களுக்கான கற்கை நெறிகளும் உண்டு. இந்தப் பயிற்சி நெறியில் 56 விதமான பயிற்சி நெறிகள் உண்டு. இந்தப் பயிற்சி நெறிகள் - குருநாகல் யாழ்ப்பாணம், இரத்தினபுரி, கண்டி, மாத்தறை, பதுளை, கல்முனை ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணம் பயிற்சியாளர்களுக்கான முகவரி -

*மாகாணப் பணிப்பாளர்*
*நயிட்டா வட மாகாண அலுவலகம்,*
*இல. 07 கோவில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பயிற்சிநெறி தொடர்பான விபரங்களையும், மேலதிக விபரங்களையும் பெற நமது ஈழநாடு பத்திரிகை நிறுவனத்திற்கு நேரில் வரவும்.

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | நெல்லியடி | சங்கானை | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 60/= | 80/= | 70/= | 50/= | 70/= | 50/= | 70/= | 50/= |
| வெண்டிக்காய் | 20/= | 20/= | 25/= | 30/= | 40/= | 20/= | 30/= | 20/= |
| உருளைக்கிழங்கு | 40/= | 60/= | 50/= | 40/= | 40/= | 45/= | 45/= | 45/= |
| கத்தரிக்காய் | 35/= | 40/= | 50/= | - | 50/= | 35/= | 40/= | 35/= |
| பாகற்காய் | 25/= | 60/= | 50/= | 40/= | 50/= | 25/= | 40/= | 50/= |
| கரட் | 30/= | 30/= | 35/= | 40/= | 40/= | 30/= | 30/= | 40/= |
| பீற்றூட் | 20/= | 20/= | 25/= | 20/= | 30/= | 25/= | 32/= | 25/= |
| முருங்கைக்காய் | 80/= | 100/= | 120/= | 100/= | 100/= | 70/= | 60/= | 200/= |
| வெங்காயம் | 30/= | 30/= | 35/= | 30/= | 40= | 25/= | 35/= | 35/= |
| பச்சை மிளகாய் | 40/= | 40/= | 45/= | 60/= | 50/= | 50/= | 40/= | 40/= |

மக்கள் பணியில் -செல்வா



# நலிந்தோரை வாழவைக்கும் தியாகி அறக்கொடை நிறுவனம்

இந்த நிறுவனமானது 527 நாவலர் வீதி, நல்லூர் - யாழ்ப்பாணம் என் முகவரியில் இயங்கிவருகிறது. இரண்டு வருடங்கள் பூர்தியான நிலையில் மேலும் தொடர்ந்து இயங்கிக் கொண்டுவருகின்றது. மக்களுக்கான சேவைகளைச் செய்துவருகின்ற தியாகி அறக்கொடை நிறுவனத்தினைக் கட்டி எழுப்பிக்கொண்டிருபபவர வாமதேவா தியாகேந்திரன்.

யாழ். மண்ணில் போராட்ட சூழ்நிலையில் அழிவுற்ற கிராமங்களில் உள்ள மக்களின் தேவைகளையும், கல்வியையும் மேற்கொள்ளமுடியாமல் வாழ்ந்துவரும் சிறுவர்களின் தேவைகளையும் இந்தநிறுவனம் பூர்த்தி செய்துவருகின்றது. இன்றைய காலகட்டத்தில் போராட்ட சூழ்நிலையில் இடம்பெயர்ந்து வெளிநாடு சென்றவர்களில் பலர் இந்த சமாதான வேளையில் இங்கேவந்து தமது உறவுகளைப் பார்த்துக் குறைநிறைகளைத் தீர்த்துவிட்டு போகின்றார்கள். இதேவேளை, வெளிநாட்டில் உறவுகளும் இன்றி, உதவிசெய்ய யாரும் [illegible] வாழ்ந்துவரும் மக்களுக்கு இந்த நிறுவனமானது சிறந்தசேவைகளைச் செய்துவருகின்றது. இதேபோல் பலரும் உதவிசெய்ய வந்தால் - இங்கே வறுமைக்கோட்டின்கீழ் வாழ்கின்ற மக்கள் கல்வியிலோ, தொழிலிலோ முன்னேறவழி ஏற்படும்.

சீதனம் வாங்கும் உலகில் கஷ்டத்தின் மத்தியில் திருமணம் செய்ய வசதியில்லாத பல பெண்களுக்கு, அதற்கேற்ப உதவிசெய்து திருமணத்தை நிறைவேற்றிவிடுகின்றது. நோயினால் வாடும் மக்களுக்கு சிகிச்சைகளுக்கான பெரும்பணத்தினை கொடுத்து உதவுகின்றது. இந்த நிறுவனத்தின் உதவிகள் நலிவுற்ற மக்களுக்கு நன்மையளிப்பதாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நலிவுற்ற மக்களின் மேம்பாட்டிற்காக, கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் போன்ற துறைகளில் சில திட்டங்களைச் செயற்படுத்துகின்றது. மாணவர்களின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தும், தேசிய மட்டத்தில் பல மாணவர்களுக்கு உதவிசெய்தும் வருகின்றது. மாணவர்களின் கல்விக்கு வறுமை தடையாக இருக்குமாயின், அந்த மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பாக புலமைப்பரிசில் திட்டங்களைச் செயற்படுத்திவருகின்றது.

தற்போது 1600 மாணவர்களுக்கு மாதாந்தம் 200 ரூபா வீதம் கொடுத்தும், சில பாடசாலைகளுக்குக் கழுத்துப்பட்டி, காலணி, இசைக்கருவி, போன்றவற்றை இலவசமாக வழங்கியும் வருகிறது. பல்கலைக்கழக மாணவர்களுக்கும் மாதாந்த உதவிப் பணத்தை வழங்கிவரும் இந்த நிறுவனம், ஆங்கிலக் கல்வியை வளர்ப்பதற்கு இலவச ஆங்கில வகுப்புக்களையும் ஆரம்பித்துள்ளது.

வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள கணவரை இழந்த அல்லது பிரிந்த அல்லது வேறுகாரணங்களினால் உழைக்கமுடியாமல் இருக்கும் 139 குடும்பங்களுக்கு, மாதாந்தம் 500 ரூபா தொடக்கம் 1000 ரூபா வரை உதவிவருகின்றது.

அது மட்டுமல்லாமல், சிறைக் கைதிகள் 11 பேரின் குடும்பங்களுக்கு மாதாந்தம் உதவிப்பணமாக 500 ரூபா வழங்குகின்றது. மேலும் இந்த வருடம் வறுமைக்கோட்டிற்குக்கீழ் இருக்கும் மிகவும் வறுமை நிலையில் உள்ள பெண்களைக் குடும்பத் தலைவர்களாகக் - தலைமையாகக் கொண்ட 100 குடும்பங்களுக்கு தலா 300 ரூபா வீதம் மாதாந்தம் வழங்கவுள்ளது.

பொருளாதாரத் திட்டங்களையும் செயற்படுத்திவருவதுடன், சென்ற வருடம் வன்னியில் பால் பதனிடல் நிலையத்தை அமைப்பதற்கு 10 இலட்சம் ரூபாவைக் கொடுத்துள்ளது. இத்துடன், சுயதொழில் முயற்சிக் கடனாக 85, 500 ரூபாவினை கடனாக வழங்கியுள்ளது. மேலும் பலருக்கு சுயதொழில் முயற்சிக்கு கடன் வழங்கவுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வாக 2004 புத்தாண்டு தினத்தன்று வன்னியில் 17 இலட்சம் ரூபாவினை சுயதொழில் முயற்சிக்கடனாக 30 குடும்பங்களுக்கு வழங்கியுள்ளது. வன்னியில் இத்திட்டத்தை பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஊடாக செய்துவருகின்றது.

மேலும் யாழ்ப்பாணம், கைதடி, கச்சாய் போன்ற இடங்களில் 3 இலவச தையல் பயிற்சி நிலையங்களை அமைத்துள்ளது. தையல் பயிற்சியாளர்களுக்கான தையல்பொருட்களை இலவசமாக வழங்கிவருகிறது. இந்த நிறுவனம் வழங்கிவரும் புலமைப் பரிசில் பெறும் மாணவர்களுக்கான சீருடைகளைப் பயிற்சியாளர்களைக் கொண்டு தயாரித்துள்ளது. இவ்வருடத்தில் சிறு ஆடைத் தொழில் அகங்களை உருவாக்கி, தையல் பயிற்சியாளர்களை அதில் இணைக்கவுள்ளது.

வைத்திய வசதிகள் அற்ற சில பின்தங்கிய இடங்களை இனங்கண்டு, அந்த மக்களுக்கு இலவசமாக மருத்துவ ஆலோசனைகளையும், மருத்துவ வசதிகளையும் வழங்கியிருக்கின்றது. இந்தத் திட்டத்தினைச் சிறந்தமுறையில் செயற்படுத்த உதவிவரும் மருத்துவர் நா.ஸ்ரீஸ்கந்தராஜா அளப்பரிய சேவையை இந்த நிறுவனததிற்கு செய்துவருகிறார்.

கச்சாய், பாலாவி, கெற்பலி வெள்ளாம்போக்கடி அகிய பகுதிகளைச் சேர்ந்த 100 இற்கு மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்களுக்கு போசாக்கு மா வழங்கிவந்தது. தற்போது அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுவரும் திரிபோஷா சத்துணவு விநியோகம் சீராக இருப்பதால், தனது விநியோகத்தனை இந்த நிறுவனம் நிறுத்தியுள்ளது.

இதைவிட கச்சாய் பகுதியில் அரசாங்க சுகாதார நிலையம் ஒன்று அமைப்பதற்கு காணி கொள்வனவிற்கு 10 ஆயிரம் ரூபா பங்களிப்பு செய்துள்ளது. மேலும் பல சுகாதார வசதிகளற்ற இடங்களுக்கு மருத்துவசேவையை விரிவுபடுத்தவுள்ளது. அத்தோடு, மக்களிடையே சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்த திட்டங்களைச் செயற்படத்தவுள்ளது.

யாழ்.மண்ணில் இத்தகைய ஒரு ஒரு நிறுவனம் செயற்பட்டு வருவதையிட்டு யாழ்.மண்ணிலுள்ளவர்கள் யாவரும் பெருமைப்படும் அளவிற்கு தனது செயற்பாடுகளை முன்வைத்து இயங்கிவருகிறது.

புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் பகுதி - IX -சிவா சின்னப்பொடி



# தொடரும் அகதிவாழ்வின் அவலங்கள்

எல்லை கடப்பின்போது ஏற்பட்ட அவலங்களைப்போல - எல்லை கடந்த பின்னரும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் அகதிமுகாம்களில் நமது மக்கள் நிறையத் துன்பங்களை அனுபவித்திருக்கிறார்கள்.

இதில் அகதிமுகாம்களுக்குள் ஏற்பட்ட முரண்பாடுகளில் வந்த துன்பங்கள் ஒருவகை என்றும், வெளியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட இன வெறி - நிறவெறித் தாக்குதல்களால் ஏற்பட்ட துன்பங்கள் இன்னொரு வகை என்றும் இவற்றை இரண்டாகப் பிரிக்கலாம். அகதிமுகாம்களுக்குள் ஏற்படுகின்ற முரண்பாடுகள் என்கின்றபொழுது - இது இயல்பான முரண்பாடுகள் என்பதற்கு அப்பால் நம்மவர்களாக உருவாக்கிக்கொண்ட முரண்பாடுகள் என்று குறிப்பிடுவது பொருத்தமானது.

நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி சாதிய சமூகமாக வாழ்ந்து பழக்கப்பட்ட, தமது எல்லைக் கதியாலுக்குச் சண்டைபிடித்த, பின்புலத்தைக் கொண்ட நமது மக்கள் - ஒரே கூரையின்கீழ் ஒரே கட்டடத் தொகுதியில், ஒரே நிர்வாக அமைப்பின் கீழ் - ஆபிரிக்கர்கள், அரேபியர்கள், சீனர்கள், வியட்னாமியர்கள், கிழக்கு ஐரோப்பியர்கள் என்று பல தரப்பட்ட மக்களுடன் சேர்நது வாழ்வதென்பது முடியாத ஒன்றாக இருந்தது.

இந்த இயலாமை அல்லது முடியாமையில்கூட இரண்டு பதம் இருந்தது. ஒன்று மாற்றுக் கலாசார, மாற்று வதிவிட சூழலில் - நமது அடையாளம் மற்றும் தனித்துவத்தை இழந்துவிடாமல் தடுப்பதற்காகத் தங்களுக்குள்ளேயே ஒரு தடுப்பு வேலியை போட்டுக்கொண்டது. (அதாவது, ஆமை - அந்நியர்களைக் கண்டால் ஓட்டுக்குள் தலையையும் கால்களையும் இழுத்துக் கொள்வதைப்போல) இது சூழலுக்குப் பொருத்தமில்லாத செயல் என்றாலும், இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களின் தளத்தில் நின்று பார்த்தால் அதில் ஒரு நியாயத்தன்மை இருக்கும்.

ஆனால், மற்றவகை நியாயப்படுத்தமுடியாத திமிர்த்தனத்தை கொண்டது. அதாவது, அகதிமுகாம்களிலுள்ள ஏனைய இனத்தவர்களுக்கு ஒரு பட்டப்பெயர் வைத்து, அவர்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற செருக்குடன் தங்களைத் தனிமைப்படுத்திக்கொண்டது.

அதாவது, ஆபிரிக்கர்களைக் கறுவல் என்றும், அரேபியர்களை 'அடையான்' என்றும், சீனர் - வியட்னாமியர்களைச் 'சப்பட்டை' என்றும் இடுகுறிப்பெயரிட்டு இழிவாக அழைப்பதில் நம்மவர்களுக்கு இருக்கும் ஆனந்தம் அளவிடமுடியாதது.

அகதிமுகாம்களில் பல்வேறு நாட்டு அகதிகளுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளுக்கான அடிப்படை - இருத்தலுக்கான போட்டியாகும். ஒவ்வொரு இனமும் புதிய நாட்டில் தன்னுடைய இருப்பை உறுதிப்படுத்திக்கொள்வதற்குப் பெரிய போராட்டம் நடத்த வேண்டித்தான் இருந்தது. இதில் சில இடங்களில் முரட்டுத்தனமும் வன்முறையும் பிரயோகிக்கப்படுவதும் தவிர்க்கமுடியாததாகவே இருந்தது. அப்படிச் செய்யவில்லை என்றால் மேற்குலக அதிகாரிகள் வர்க்கத்திடமிருந்து எதையும் பெற்றுக்கொள்ளமுடியாத ஒரு சூழ்நிலையே இருந்தது.

குறிப்பாக, ஆபிரிக்க கறுப்பின மக்களைப் பொறுத்தவரை - மேற்குலகில் தமது இருப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றால் அவர்கள் மற்றைய இன அகதிகளைவிட அதிகளவுக்கு போராடவேண்டியிருந்தது.

என்னதான் நிறவாதமும் இனவாதமும் ஒழிந்துவிட்டதாக மேற்குலகநாடுகள் தங்களுடைய அரசியல் சாசனங்களில் எழுதிவைத்தாலும் அதிகாரிகள் மட்டத்தில் அது புதிய வடிவத்தில் இருக்கத்தான் செய்தது. ஆபிரிக்க மக்களின் நிறத்தையும் விகாரமான தோற்றத்தையும் அறியாமையையும் வறுமையையும் வைத்து அவர்களையும் தங்கள் நாட்டுக்கு வந்துசேர்ந்த கழிவுகள் குப்பைகள் என்றுதான் மேற்குலக அதிகாரிகள் வர்க்கம் பார்த்தது.

நம்முடைய மக்களோ மேற்குலக அதிகாரிகள் வர்க்கத்தைவிட ஒருபடி மேலே நின்றுதான் அவர்களைப் பார்த்தனர். இது ஆபிரிக்க மக்களுக்கும் நம்மவர்களுக்கும் இடையிலான சிறிய முரண்பாடாக ஆரம்பித்து, பின்னர் அவர்கள் நம்மவர்களைக் குறிவைத்து தாக்கும் அளவுக்குப் பெரிய முரண்பாடாக மாறிவிட்டது.

குறிப்பாக, பிரான்ஸ் நாட்டிலேயே இந்த முரண்பாடு அதிக வீச்சமாக உள்ளது. 1980களில் பெரும்பாலான அகதிமுகாம்களில் நம்மவர்கள் நம்பித்தங்கமுடியாத ஒரு சூழ்நிலையையும் இது தோற்றுவித்துவிட்டது. நம்மவர்கள் பிரான்சுக்கு புலம்பெயர்ந்து செல்வதற்கு முன்னர், அனைத்துகீழ்மட்ட வேலைகளையும் கறுப்பின மக்களே செய்து வந்தார்கள்.

நம்மவர்கள் அங்கே சென்று இந்த வேலைத் தலங்களில் நுழைய ஆரம்பித்ததும், ஆபிரிக்க மக்களுடனான முரண்பாடு கூர்மையடைய ஆரம்பித்தது.

ஆபிரிக்க மக்களைப் பொறுத்தவரையில், அவர்கள் பெரும்பாலும் பிரான்சின் காலணி நாடுகளிலிருந்து வந்தவர்கள். அவர்களுக்குப் பிரெஞ்சுமொழி பேசத்தெரியும் (பல ஆபிரிக்க நாடுகளில் பிரெஞ்சு மொழிதான் பேச்சுமொழியாக இருக்கிறது).

பிரான்ஸ் நாட்டில் ஒரு உணவு விடுதியை எடுத்துக்கொண்டால்- அதில் வேலைசெய்யும் ஊழியர்களுக்கான வேலைநேரம் வரையறுககப்பட்டிருக்கும். காலை 10 மணிக்கு ஆரம்பிக்கும் வேலை பி.பகல் 3 மணிக்கு முடிந்து, பின்னர் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி இரவு பத்து மணிக்குமுடியும்.

கோப்பை கழுவும் ஒரு வேலைக்கு பிரெஞ்சுமொழி தெரிந்த ஒரு ஆபிரிக்கன் சென்றால் - அவன் அந்த வேலையை மட்டுத்தான் செய்வான். அவனைக்கொண்டு மரக்கறி வெட்டும், வெங்காயம் உரிக்கும், மீன், இறைச்சி வெட்டும் வேலை எதையும் செய்விக்கமுடியாது. மாலை 3 மணிக்கும், இரவு 10 மணிக்கும் வேலை முடிகின்றது என்றால் - 15 நிமிடத்திற்கு முன்பே - ஆபிரிக்கன் - வேலையை முடித்து உடை மாற்றி கொண்டு புறப்படத் தயாராக இருப்பான். வேலைகளுக்கான பிரான்ஸ் நாட்டின் ஒழுங்கு வீதிகளில் - இதெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால், இந்த ஆபிரிக்கரின் இடத்தில் - பிரெஞ்சுமொழி தெரியாத ஒரு தமிழன் வேலைக்கு சேரும்போது - காலையில் தலைமை சமையல்காரர் 50 கிலோ உருளைக் கிழங்கை தோல்சீவும்படியும், 25 கிலோ வெங்காயத்தை உரிக்கும்படியும் கொண்டுவந்து கொடுப்பார். மறுப்பேதும் சொல்லாமல் நம்மவர் செய்வார். அதற்குள் சாப்பிட்ட கோப்பைகள், கிளாசுகள் நூற்றுக் கணக்கில் வந்து சேர்ந்துவிடும் - பிறகு ஓய்வே இல்லாமல் அதைக் கழுவவேண்டும். அதைச் செய்து கொண்டிருக்கும்போது - உணவு பரிமாறும் பிரிவுக்குப் பொறுப்பான நபர் (செவ்) வந்து நிலத்துக்கு அடியில் இருக்கும் களஞ்சிய அறைக்குச் சென்று - வைன் போத்தல் கேஸ் ஒன்றை அல்லது விஸ்கி போத்தல் கேஸ் ஒன்றைத் தூக்கி வரும்படி கட்டளையிட்டுவார். அதையும் இவர் கெய்யவேண்டும்.

அந்த வேலையை செய்ய 15 நிமிடம் எடுத்தால், இங்கே மறுபடியும் கோப்பைகள் குவிந்துவிடும். பிற்பகல் 2.45 மணிக்கும் இரவு 9.45 இற்கும் (ஆபிரிக்கர்கள் வேலை முடிக்கும் நேரம்) பார்த்தால், 300-400 கோப்பைகள் வந்து குவிந்திருக்கும். நம்மவருக்கு அதை கழுவாமல் விட்டுவிட்டுப்போக மனம் வராது. கடைசிக் கோப்பையைக் கழுவிமுடிக்கும் வரையிலும் நின்று வேலை செய்துவிட்டுதான் அவர் செல்வார். பிற்பகல் 3 மணிக்கு வேலைமுடியவேண்டும் என்றால், இவர்கள் 4.30 மணிக்குத்தான் வேலை முடிப்பார்கள். இரவு 10 மணிக்கு என்றால் இவர்கள் முடிக்க 11.30 மணியாகும்.

மொழி தெரிந்த, முரட்டுச்சுபாபமுள்ள - ஆபிரிக்கர்களை வேலைக்கு வைத்து மல்லுக்கட்டுவதைவிட, எதைச் சொன்னாலும் மறுப்பேதும் சொல்லமால் செய்யக்கூடிய - நேரம் பார்க்காத எசமான, விசுவாசமுள்ள தமிழர்களை வேலைக்கு வைத்திருப்பதையே பெரும்பாலான உணவு விடுதி உரிமையாளர்களும், அலுவலக சுத்திகரிப்பு வேலையில் ஈடுபடும் நிறுவன இயக்குநர்களும் விரும்பினார்கள்.

1990 ஆம் ஆண்டு பிரான்சிலுள்ள உணவுவிடுதி உரிமையாளர்கள் சங்கம் - இலங்கைத் தமிழர்களுக்கு விசா வழங்கும்படி அப்போதைய பிரான்ஸ் அதிபர் பிரான்சுவா மித்திரோனுக்கு வேண்டுகோள் விடுத்தது - முக்கியமாகக் குறிப்பிடவேண்டிய ஒன்றாகும்.

பிரான்சில் நம்மவர்களின் வருகை அதிகரிக்க, அதிகரிக்க கறுப்பினத்தவர்களின் வேலைவாய்ப்பென்பது குறைந்துகொண்டு சென்றது. அவர்கள் வேறு வேலைகளை தேடும் நிலைமைகளுக்குத் தள்ளப்பட்டார்கள். இதுவும் நம்மவர்களை ஆபிரிக்கர்கள் விரோதிகளாகப் பார்க்கும் நிலையை உருவாக்கிவிட்டது.

1985 இற்கும் 1990 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மட்டும் - 123 தாக்குதல்களை ஆபிரிக்கர்கள் - நம்மவர்கள்மீது மேற்கொண்டதற்கான பதிவுகள் பாரிஸ் மாவட்ட (இல் து பிரான்ஸ்) காவல் துறையில் உள்ளன. இதில் 28 தாக்குதல்கள் அகதி முகாம்களில் வைத்து மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இரண்டு கொலைகளும் - 38 படுமோசமான தாக்குதல் சம்பவங்களும் இவற்றில் அடக்கம் என்று அறியமுடிந்தது.

இன்றுவரை பரிஸின் புறநகர்ப் பகுதிகளான சார்சல் மற்றும் கார்ஸ்-லே - கோணேஸ் என்பன தமிழ் இளைஞர்களுக்கும் - ஆபிரிக்க இளைஞர்களுக்கும் அடிக்கடி மோதல்கள் நடக்கும் நகரங்களாக இருந்தன.

1998 ஆம் ஆண்டு சார்சல் பகுதியில் நம்மவர்களுக்கும் ஆபிரிக்கர்களுக்கும் இடம்பெற்ற மோதலைத் தொடர்ந்து, அப்பகுதியில் வசிக்கும் ஆபிரிக்க இனத்தைச் சேர்ந்த உயர்வகுப்பு மாணவர்களை- நான் பாரிஸ் ஈழமுரசு பத்திரிகைக்காகச் செவ்விகண்டேன். அப்போது பாடசாலையிலும், பல்கலைக்கழகங்களிலும் தங்களுடன் நல்ல நட்புறவை வைத்துக்கொள்ளும், சேர்ந்து விளையாடும் தமிழ் மாணவர்கள் வீட்டுக்கு வந்தால், தங்களோடு கதைப்பதில்லை. சேர்ந்து விளையாடவருவதில்லை என்று - தங்களுடன் சேர்வதை தமது அப்பா, அம்மா விரும்புவதில்லை என்று தமிழ் இளைஞர்கள் சொல்வதாகவும் தெரிவித்தனர்.

வெள்ளையர்களைவிட தமிழர்கள்தான் அதிகமாக நிறபேதம் பார்ப்பதாகக் குறிப்பிட்ட அவர்கள், வெள்ளையரின் பார்வையில் தமிழர்களும் கறுப்பர்கள்தான் என்றும், தாங்கள் சுத்தமான கறுப்பு - நாங்கள் வெளிறின கறுப்பு என்று தமிழர்கள் மத்தியிலுள்ள இந்த வெள்ளைக்கார மனப்பான்மைதான் - தாங்கள் அவர்களை வெறுக்கக் காரணம் என்றும் தெரிவித்தனர்.

*(தொடரும்)*

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அறிவுஉடையார் ஆவது அறிவார் அறிவுஇலார்*
*அஃதுஅறி கல்லா தவர்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## விடுதலைப் புலிகளின் சமிக்ஞையும், தமிழ் மக்களின் வரலாற்றுப் பொறுப்பும்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின்போது, தமிழர் தேசியக் கூட்டமைப்புக்கான தங்களின் ஆதரவைத் தமிழீழ விடுதலைப் புலிகள் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளமையானது, தேர்தல் தொடர்பான தமிழ் மக்களின் சந்தேகங்கள் பலவற்றையும் நீக்கியுள்ளதுடன், தாங்கள் இதன்போது எடுக்கவேண்டிய தீர்க்கமான முடிவு குறித்து அவர்கள் ஒரு தீர்மானத்திற்கு வரவும் வழிசமைத்துள்ளது எனலாம்.

கடந்த இரு தசாப்தகாலத்திற்கும் அதிகமான காலப் பகுதியில் நடைபெற்ற தேர்தல்களின் போதெல்லாம் விடுதலைப் புலிகள் தேர்தல்கள் அனைத்தையும் பகிஷ்கரிக்குமாறு, வாக்காளர்களையும், தேர்தலில் போட்டியிடவேண்டாமென வேட்பாளர்களையும் கோருவது வழக்கமாக இருந்தது.

அப்போதெல்லாம் தமிழ் மக்களுக்கு எதிராகப் பிரகடனம் செய்யப்படாத கொடியயுத்தம் ஒன்றை நடத்திவந்த அரசாங்கங்கள், தமிழ் மக்களை புலம்பெயர்ந்தும், இடம்பெயர்ந்தும் போகவைத்ததுடன் - அவர்களுக்கு எதிரான கொடும் அடக்கு முறைகள், பொருளாதாரத் தடைகள் ஆகியவற்றை அமுல் செய்து, அவர்களின் இயல்பு வாழ்க்கையை முற்றாகச் சீரழித்த நிலையில், தேர்தலை நடத்தி, தமிழர் பகுதிகளில் இயல்புநிலை நிலவுவதாகக் காட்டுவதற்கும், அதன்மூலம் சர்வதேச சமூகத்தை ஏமாற்றி, இங்கு இனப்பிரச்சினையென எதுவுமில்லை, பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளதாகப் பிரசாரம் செய்வதற்குமே, தேர்தலைப் பயன்படுத்த முனைந்தன என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

இதன் காரணமாகவே, அதாவது பேரினவாத அரசுகளின் விஷமத்தனமான பொய்ப்பிரசாரங்களுக்குத் துணைபோகாது இருக்கவும், சிங்கள அரசியல் தலைமைகளின் தமிழ் மக்கள் மீதான மேலாதிக்க அடக்குமுறைகளுக்கு அனுசரணையாகச் செயற்படாமல் இருக்கவும், தமிழ் மக்கள் தமது தாயக விடுதலைக்காக நடத்தும் தியாகமும், வீரமும் செறிந்த போராட்டத்தைக் கொச்சைப்படுத்தாமல் இருக்கவுமே தமிழ் மிதவாத அரசியல்வாதிகளிடமும், தமிழ் மக்களிடமும் தேர்தல்களைப் பகிஷ்கரிக்குமாறு கேட்டுக்கொண்டார்கள் என்பதை விளக்க வேண்டியதில்லை.

அதையும்மீறி, தம்மினத்தைத் தாமே காட்டிக்கொடுத்து, நாடாளுமன்றப் பதவிகளைப் பெற்றுக்கொண்டு, தத்தம் சுயநல அபிலாஷைகளை இலக்குவைத்துச் செயற்பட்ட தமிழர் விரோத சக்திகள், அத்தகைய குணாம்சத்தைக் கொண்ட தமது அற்ப - சொற்ப ஆதரவாளர்களின் துணையுடன் ஐந்தும், பத்தும், நூறும், இருநூறுமென வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றக் கதிரைகளில் அமர்ந்துகொண்டு ஆடிய ஆட்டமும், அடித்த கொட்டமும் தமிழர் வரலாற்றில் இருள்நிறைந்த அத்தியாயங்களாக உள்ளன.

சிங்களப் பேரினவாதிகளையும், அயலக மேலாதிக்க சக்திகளையும் திருப்திப்படுத்த, அவர்களின் கைக்கூலிகளாக இயங்கிய அரசியல் குழுக்களுக்கு இனமானம் மிக்கவர்களான உண்மையான தமிழ் உணர்வு கொண்டவர்கள் ஆதரவின் தொகையைக் கணக்கிட்டுப் பார்த்தால், மக்கள் அவர்களுக்கு எத்தகைய மதிப்பை அளித்தார்கள் என்பது புரியும்.

அதுகுறித்து விளக்கவேண்டிய அவசியமில்லை.

அப்போதெல்லாம் அறியாமை காரணமாகவோ, வேறு வெளி அழுத்தங்கள் காரணமாகவோ தேர்தலில் போட்டியிட்டு, மக்கள் தம்மை நிராகரித்தமைக்கான காரணத்தை நியாயபூர்வமாகப் புரிந்துகொண்டு, தாம் விட்ட வரலாற்றுத்தவறுகளை உணர்ந்துகொண்டு, தம்மை மாற்றிக்கொண்டு, உண்மையான தமிழ்த் தலைமைச் சக்தி எதுவென்பதை இனங்கண்டு, தங்களையும் அந்தச் சக்தியின் வழிநடத்தலின்கீழ் இணைத்துக் கொள்ள முனைந்த தமிழ் அமைப்புகள் - இப்போது ஓரணியில் அணிதிரண்டு, தமிழ் மக்களின் பலத்தை ஒருங்கிணைத்து, உலகிற்குப் புலப்படுத்த உறுதிபூண்டுள்ளமையானது தமிழர் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும்.

கடந்த பொதுத்தேர்தலுக்கு முன்னர், எதிரிப்படைகளைப் போர்முனையில் வியத்தகு முறையில் வெற்றிகொண்டு, ஒரு புதிய புறநானூறைப் படைத்த பெருமிதத்தில் ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தை அறிவித்த விடுதலைப் புலிகள் - புதிய அரசாங்கத்துக்கு தமது சமாதானம் மீதான விருப்பார்வத்தை பகிரங்கப்படுத்தியதை அடுத்து, கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தொடரும் அமைதிநிலையை, குழப்பும் வகையில் ஆட்சியைக் கலைத்த ஜனாதிபதி - புதிய தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிட்டதன் மூலம், சமாதானத்தை விரும்பும் அதேசமயம் - போரில் புறங்காண விரும்பாத தமிழ் மக்களுக்கு ஒரு சவாலை விடுத்துள்ளார் என்றே கூறவேண்டும்.

எனவேதான், இந்தத் தேர்தல் தமிழ் மக்களுக்கு மிக முக்கியமான ஒன்றாக உள்ளது.


தமிழ் மக்கள் ஒன்றுதிரண்டு, தாம் எந்தத் தலைமையின் பின்னால் அணிதிரண்டு நிற்கும் அரசியல் சக்திக்கு, ஆதரவாக இருக்கிறோம் என்பதை பேரினவாத சக்திகளும், சமாதானத்தை வலியுறுத்தும் சர்வதேச சமூகத்துக்கும் வல்லாதிக்க நாடுகளுக்கும் ஓங்கியுரைத்து, உணர்த்தவேண்டிய வரலாற்று முக்கியத்துவம் மிக்க தேர்தலை - இப்போது சந்திக்கவுள்ளார்கள் என்பதில் ஐயமில்லை.

இது நாடாளுமன்றக் கதிரைகளை நிரப்புவதற்கான தேர்தல் அல்ல. நாடாளுமன்றம் சிங்கள இனவாத சக்திகளின் இருப்பிடம் என்பதும், அதன்மூலம் தமிழர்கள் தம் உரிமைகளை வென்றெடுக்க முடியாது என்பதும் வரலாறு தமிழ் மக்களுக்கு உணர்த்தியுள்ள பாடமாகும்.

ஆனாலும், இந்த் நாடாளுமன்றத் தேர்தலை தமிழ் மக்கள் - தமது ஒன்றிணைந்த சக்தியை வெளிப்படுத்தும் அரசியற்களமாகவும், உலகிற்குத் தம் விடுதலைத் தாகத்தை உணர்த்தும் ஜனநாயகத் தளமாகவும் பயன்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதனையே விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் நேற்றுமுன்தின அறிவிப்பு தெட்டத்தெளிவாக உணர்த்துகிறது எனலாம்.

## நாடும் நடப்பும்




# அதாவுல்லா அணி மீதான தடை மே 24 ஆம் திகதிவரை நீடிப்பு !

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவ சர்ச்சை தொடர்பான வழக்கு விசாரணை - கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இடம்பெற்றபோது, முஸ்லிம் காங்கிரஸின் தலைவர், தவிசாளர், செயலாளர் நாயகம், சிரேஷ்ட துணைத் தலைவர், தேசிய அமைப்பாளர் ஆகிய பதவிகளை முறையே எஸ்.சுபைதீர்ன், ஏ.எல்.எம்.அதாவுல்லா, ஏ.எல்.எம்.ஹப்ரத், ஏ.உதுமால் லெப்பை, ஏ.ஜே.எம்.முஸம்மில் ஆகியோர் பிறப்பித்துள்ள இடைக்கால தடையுத்தரவை - மேன்முறையீட்டு நீதிமன்றம் மே 24ஆம் திகதிவரை நீடித்துள்ளது.

இடைக்கால தடையுத்தரவு நீக்கப்படும் வரை, அமைச்சர் ரவூப் ஹக்கீம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவராக செயற்படமுடியும் என்றும் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவராக அமைச்சர் ரவூப் ஹக்கீம் செயற்படுவதை எதிர்த்து முன்னாள் அமைச்சர் அதாவுல்லா உட்பட 11 பேர் தாக்கல் செய்த வழக்கு விசாரணை - மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி நிஹால் காமினி அமரதுங்க முன்னிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

இதன்போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், தவிசாளர் சிரேஷ்ட துணைத்தலைவர், தேசிய அமைப்பாளர் ஆகிய பதவிகளை முறையே எஸ்.சுபைர்தீன், ஏ.எல்.எம். அதாவுல்லா, ஏ.எல்.எம்.ஹப்ரத், ஏ.உ துமாலெப்பை, ஏ.ஜே.எம். முஸம்மில் ஆகியோர் வகிப்பதற்கு பிறப்பித்திருந்த இடைக் காலத் தடையுத்தரவை நீதிபதி மே 24 ஆம் திகதிவரை நீடித்தார்.

இடைக்காலத் தடையுத்தரவு நீக்கப்படும் வரை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவராக அமைச்சர் ரவூப் ஹக்கீம் செயற்படுவதுடன், சின்னமாக மரச்சின்னத்தைப் பாவிக்கமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த வழக்கு விசாரணையின்போது அமைச்சர் ரவூப் ஹக்கீம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி இக்ராம் முஹமத், சட்டத்தரணிகளான நிசாம்காரியப்பர், ஏ.எம்.பாயிஸ், எம்.ஐ. ஆர்.ஹாதி, எம்.எல்.எம். நவாஸ், எம்.ஐ.எம்.ஜனுல்லா ஆகியோர் ஆஜராகினர்.

### தமிழ் தேசிய கூட்டமைப்பின்

# தேசிய பட்டியல் உறுப்புரிமையை அம்பாறைக்கு வழங்க கோரிக்கை

தமிழ்த்தேசியக் கூட்டடைமப்புக்குக் கிடைக்கும் தேசிய பட்டியல் மூலமான நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இந்த முறை அம்பாறை மாவட்டத்திற்கு வழங்கவேண்டும் என்ற கோரிக்கை வலுத்துவருகிறது.

கல்முனை சம்மாந்துறைத்தொகுதிகளைப் பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய வகையில் வழங்கவேண்டுமென்று பொது நிறுவனங்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றன. தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கடந்த பொதுத்தேர்தலில் திருமலை மாவட்டத்திற்குத் தேசிய பட்டியல் உறுப்புரிமையை வழங்கியது. இந்த முறை அம்பாறை மாவட்டத்திற்கு வழங்குவதன்மூலம், அபிவிருத்தியில் மிகவும் பின்தங்கிய தமிழர் பிரதேசங்களை முன்னேற்றமுடியும்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி - அம்பாறை மாவட்டத்தில் கடந்த பொதுத்தேர்தலில் மூன்று ஆசனங்களையும், நு.ஆ. ஒரு ஆசனத்தையும் பெற்ற நிலையிலும், பொதுஜன ஐக்கிய முன்னணி ஒரு ஆசனத்தையும், ஐக்கிய தேசிய முன்னணி ஒரு ஆசனத்தையும் தேசிய பட்டியல்மூலம் அந்த மாவட்டத்திற்கு வழங்கியது.

ஆனால் தமிழர் தரப்பில் ஒரேயொரு உறுப்பினரே தனித்து நின்று பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பு - தேசிய பட்டியல் ஆசன ஒதுக்கீடு தொடர்பாக விரைவில் வெளிப்படையாக அறிவிக்கவேண்டும் என்றும் அம்பாறை மாவட்ட பொது அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

# அம்பாறை தேர்தல் ஒத்திவைப்பு உயர் நீதிமன்றம் ஏற்பாடு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த உள்ளூராட்சித் தேர்தலை, குறிப்பிட்ட தினம் நடத்த இயலாது என்று தேர்தல் ஆணையாளர் -உயர் நீதிமன்றத்துக்கு நேற்று முன்தினம் அறிவித்தார்.

2002 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்புக்கமைய தேர்தல் நடைபெற வேண்டுமெனக்கோரி உயர்நீதிமன்றத்தில் கடந்த வாரம் தாககல் செய்யப்பட்ட வழக்கு, நேற்றுமுன்தினம் விசாரிக்கப்பட்டபோது, தேர்தல் ஆணையாளர் சார்பில் ஆஜராகிய, சிரேஷ்ட சட்டத்தரணி - திட்டமிட்டபடி இந்தத் தேர்தலை நடத்த முடியாது என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளதாக நீதிமன்றிடம் தெரிவித்தார்.

2002 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின்படி இந்தத் தேர்தலை நடத்துவதாயின், பொதுத்தேர்தலின் பின்னரே அதை நடத்தமுடியும் என்று அவர் நீதிமன்றத்துக்கு மேலும் தெரிவித்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட உயர்நீதிமன்றம் - தேர்தலை ஒத்திப்போடுமாறும், உரிய திகதியைத் தேர்தல் ஆணையாளர் தற்துணிவின் பிரகாரம் நிர்ணயிக்குமாறும் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

# யுத்த நிறுத்த உடன்பாடு தொடர்ந்து பேணப்படும்

### அமைச்சர் கதிர்காமர் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்ந்து பேணப்படும். நாட்டில் எந்தவொரு சமூகமும் யுத்தத்தை விரும்பவில்லை. விடுதலைப் புலிகள் உட்பட ஏனைய கட்சிகள் மற்றும் அமைப்புக்கள் ஆகியவற்றுடன் அரசியல் பேச்சுக்கள்" நடத்துவதன்மூலம், இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உத்தேசித்திருப்பதாக அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று வர்த்தக சமூகத்தினருடன் நடந்த கலந்துரையாடலிலேயே லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணியின் பொருளாதாரக் கொள்கை, தாராளக்கலப்புக் கொள்கையாகும். நாட்டை அபிவிருத்தி செய்யும் பாரிய பொறுப்பு தனியார் துறையினரிடம் ஒப்படைக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பொருண்மியம்

- எஸ்.ஜெயா


# இயற்கையின் சீற்றத்தால் செயலிழந்த நெல் உற்பத்தி

> "போர் ஓய்வுக் கலாசாரம் ஒன்று தோற்றம் பெற்றமையால், விவசாயிகள், தமது பயிரீடு வலுவினைக் கொண்டு, வெடிஅச்சப்பாடுகள் மற்றும் இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்கள் என்பவற்றினை கழிவிடப்பட்ட பாகங்களாக விட்டு ஏனைய சிறுபகுதிகளிலேயே தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டனர். பாரிய சுமைகளைக் கொண்டு நகரமுடியாது, தமது மூளைக்கு விலங்கிட்டு, சிந்தனையைச் சிறைப்பிடித்து, ஜீவனோபாயத்துக்காகப் போராடும் தென்மராட்சி விவசாயிகளின் நிலைகண்டு யாரும் இரங்குவார்களா?"

இயற்கை நமக்குக் கொடுத்த கொடைதான் நிலம், நீர், வளி போன்ற இயற்கை வளங்களாகும். இவை பூமிக்கோளில் தமக்கு ஏற்ற விகிதாசாரத்தில் சமநிலை காணும் இடங்களே மனித வாழ்முறைக்கு ஏற்ற பௌதீக அமைவிடங்களாக காணப்படுகின்றன.

இத்தகைய இயற்கை வளத்தின் வரவுகளை எதிர்பார்த்தே விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வது வழமை இதற்கு தென்மராட்சி மக்களும் விதிவிலக்கானவர்கள் அல்ல.

ஆனால், கடந்த பல ஆண்டுகளாக போர் முறைக் கலாசாரம் ஒன்று காணப்பட்டமையால் பெருமளவான விவசாய நிலங்கள் செய்கை பண்ணப்படாது வீணே கிடந்தன. இவ்வாறு



வீணே விடப்பட்டதற்கு, அவர்களின் இடப்பெயர்வு மற்றும் நிதியியல் பற்றாக்குறை என்பவற்றோடு பெருமளவு நிலபுலங்களை இலங்கை இராணுவம் தனது ஆளுகைக்குள் உள்வாங்கியிருந்தமையும், பலபிரதேசங்கள் வெடிபொருள் அபாய பிரதேசங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டமையும் காரணங்களாக அமைந்தன.

ஆனால், இன்று போர் ஓய்வுக்கு கலாசாரம் ஒன்று தோற்றம் பெற்றமையால், விவசாயிகள் தமது பயிரிடு வலுவினைக் கொண்டு வெடி அச்சப்பாடுகள் மற்றும் இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்கள் என்பவற்றினை கழிவிடப்பட்ட பாகங்களாக விட்டு, ஏனைய சிறுபகுதிகளிலேயே தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இவர்கள் மேற்கொண்ட விவசாய பூமியானது, வானம் பார்த்த பூமியாகக் காணப்பட்டதால், இயற்கையின் வரவிலேயே இவர்களின் வாழ்வு நிலை தீர்மானிக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது.

இந்த வகையில் இந்த ஆண்டும் பெருமளவான விவசாயிகள் தமது விவசாய நிலங்களில் வழமை போன்று பருவகால நெல் விதைப்பினை மேற்கொண்டனர். ஆரம்பத்தில் கிடைத்த மழையால் பயிர்கள் நன்றாகவே காணப்பட்ட போதும், பிற்பகுதியில் ஏற்பட்ட வரட்சியினால் பெருமளவு மேட்டு வயல் நிலங்கள் - கதிர்கள் வராதநிலையிலேயே சாவு நிலையை அடைந்து விட்டன.

அத்தோடு, பெருமளவு விவசாயிகள் தமது விளைநிலத்துக்கு விடலைப் பசளைகளை தூவுவதற்கு நீர் இன்றி அதனை வீட்டில் வைத்திருப்பதனைக் காணமுடிகின்றது. அத்தோடு, அவர்களின் பருவகால விளைவில் தங்கி வாழும் நிலையினைப் பார்க்கும்போது பரிதாபமாகவே உள்ளது.

மேலும் எஞ்சிய தாழ்நிலப்பகுதிகளில் காணபபடும் நெற்கள் - சராசரியான விளைவினைக் கொடுத்தபோதும், அவை அந்தமாதம் 11 ஆம் , 12, ஆம் திகதிகளில் தொடர்ந்து பெய்த மழை நீரினால் பெரும் சேதத்திற்கு உள்ளாகியதோடு, அதனை அறுவடை செய்வதிலும் பெரும சிரமங்களே காணமுடிகின்றது.

இங்கு அறுவடைக் காலங்களில் 'கூலிகளை' பெறுவது பெரும் கடினமாகவே உள்ளது. ஆனால், நாட்டில் வேலையற்றோர் தொகையே அதிகம் உள்ளது எனப்பிரசாரப்படுத்தப்படுகின்றபோதும் - நெல் அறுவடை, களைபிடுங்குதல், நெல்விதைப்பு, சூடுமிதித்தல் என்பவற்றுக்குக் கூலிகளை அமர்த்துதல் என்றால் விவசாயிகளுக்குப் போதும் போதும் என்ற நிலையே வந்துவிடும்.

இத்தகைய நிலைப்பாட்டுக்குக் காரணம் யாது? இன்று யாழ்குடாநாட்டில் வேலையற்றோர் தொகை அதிகம் எனப் பேசப்படுகின்ற போதும், தென்மராட்சிப் பிரதேச விவசாய வேலைகளுக்கு ஆட்பற்றாக்குறை நிலவுவது ஏன்?

இதற்கான காரணத்தினை விரிவாக நோக்குகின்றபோது, இன்றைய அரசினால் வழங்கப்படும் நலன்புரிக் கொடுப்பனவுகள் (உலர் உணவு, இலவச சீருடை, இலவச பாடநூல், இலவச மருத்துவம், இலவசக் கல்வி) அதிகரிகப்பட்டமையோடு, அரசசார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் 'நிதானிக்கப்படாத' கொடுப்பனவுகள் என்பன மக்களை தொழில் நஷ்டத்திலிருந்து ஒதுக்கச செய்தது எனலாம்.

இவற்றினைவிட, வெளிநாட்டு மோகத்தால் ஏற்பட்ட வெளிநாட்டு பணவருவாய, உள்நாட்டு உழைப்பில் ஊக்கமின்மையைத் தூண்டிவிட்டதோடு, தாம் ஓர் (பணவாய்ப் பால்) உயர் குழாம் எனும் சிந்தனைச் சூழலை உண்டு பண்ணிய தெனலாம்.

இத்தகைய சூழ்நிலை, நாட்டில் அபிவிருத்திப் பாங்கான அத்தகைய உற்பத்தித் தொழிற்பாட்டிற்கான ஊழியர்கள் பற்றாக்குறையினைத் தூண்டிவிட்டது. இத்தகைய அபாய நிலைக்குத் தென்மராட்சி வவசாயிகளும் அகப்பட்டுக்கொண்டு, விழிக்கவேண்டிய ஓர் சூழ்நிலைப் போக்கே இன்றுள்ளது.

இன்று தென்மராட்சியில் நாட்கூலிகளைப் பிடிப்பது பெரும் கடினமாகவே உள்ளது. இதனால், விவசாயிகள் பெருமளவில் நாட்டு முறைக் கூலி வழக்கான 'பொருத்தம்' எனும் முறையிலேயே தமது நெற்பயிரினை அறுவடை செய்யவேண்டியுள்ளது.

இவ்வாறு செயற்படுகையில், ஒரு தொழிலாளி ஒரு பரப்பிற்கு 100 ரூபாவிலிருந்து 150 ரூபாவரை பெற்றுக்கொள்கின்றான். இதனால் ஒரு விவசாயி - ஒரு ஏக்கரை அறுவடை செய்ய 2400 ரூபாவிலிருந்து 3600 ரூபாவரை செலவிடவேண்டியுள்ளது.

இவ்வாறு நோக்கின் - ஒருவர் ஒரு நாளைககு 6 மணித்தியால வேலை நாளில். சாதாரணமாக 5 பரப்பு அறுவடை செய்யமுடியும். இதனால், ஒருவர் ஒரு நாளைக்கு சதார ணமாக 500 ரூபாவிலிருந்து 750 ரூபாவரை வருமானம் பெறக்கூடியதாக இருந்தபோதும், இந்தத் தொழிலுக்கு ஊதியப் பற்றாக்குறை ஏற்படுவதேன்?

எமது அண்டை நாடான இந்தியாவை எடுதது்க் கொண்டால், பெருமளவான பட்டதாரிகள் சுய தொழிலில் ஈடுபடுவதோடு, முகாமைத்துவம், பொறியியல் போன்ற துறைகளில் கற்றவர்கள்கூட விவசாய உற்பத்தியில் ஆர்வம் காட்டி, நாட்டின் பொருளாதாரத்தை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்கின்றனர்.

இங்கு ஊரகமேம்பாட்டுத்திட்டம், கிராமசாலைத் திட்டம், எமது கிராம திட்டம் எனப் பல்வேறு திட்டங்களாகச் செய்யப்படும். அடிமட்ட வேலைகளிலிருந்து (வீதி அமைத்தல், தரிசு நிலமேம்பாடு) உயர்மட்டம் வரை பட்டதாரி இளைஞர்களே ஈடுபடுகின்றனர்.

இத்தோடு கட்டுமாணப்பணி, உணவாக்கத் தொழில்நுட்பம், மழை நீர் சேமிப்புத்திட்டம் என்பவற்றில் அவர்களின் பங்களிப்பு நிறையவேயுள்ளது. இதனை முன்னுதாரணமாகக் கொண்டு எமது பட்டதாரிகள் ஏன் செயற்படக் கூடாது? இப்படிச் செயற்பட முன்வருவார்களேயாயின், தென்மராட்சியிலுள்ள தொழிலாளர் பற்றாக்குறைமட்டுமன்றி, நாட்டினது உற்பத்தி வளமும் முன்னேற்றமடையுமல்லவா?

அதாவது, நிலப்பண்பாடு, வளமாக்கிப் பிரயோகம், அறுவடைத் தொழில்நுட்பம், தொழிலாளர் பற்றாக்குறை, இயற்கையின் ஒழுங்குகள், மழைபொழிவு என்பவற்றோடும், பன்றிகள் போன்ற அழிவுதரும் விலங்குகளோடும் போராடி, அதனூடே பெற்றுக்கொண்ட தமது நெல் வளத்தினை அவர்கள் சந்தைப்படுத்தும்போது, விலைரீதியாகப் பெரும் பின்னடைவினையே எதிர்நோக்குகின்றனர்.

இவர்களது உற்பத்திச் செலவோடு ஒப்பிடுகையில், விற்பனை விலை மிகவும் தாழ்மட்டத்திலேயே காணப்படுகின்றன. இன்று யாழ். மாவட்டத்தில் ஒரு மூடை நெல்லின் விலை (60 கிலோ) 800 ரூபாவாக இருந்து 900 வரையே விற்பனையாகின்றன. இத்தகைய தாழ்நிலை விலைக்கு, அரசினால் மேற்கொள்ளப்படும் நிவாரணக் கொடுப்பனவு, தொண்டு நிறுவனங்களின் நிர்ணயிக்கப்படாத மானியங்கள் என்பனவும் - நெல்விலை வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்ததோடு, வன்னி நெல்லின் வருகையும் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது.

இத்தகைய சூழ்நிலைத் தோற்றப்பாடுகள், தென்மராட்சி விவசாயிகள் மட்டத்தில் பெரும் பின்னடைவினையே அவர்கள் வாழ்வு நிலையில் ஏற்படுத்திய தெனலாம். இத்தோடு அவர்களின் இடப்பெயர்வால் ஏற்பட்ட பொருளாதார இழப்பும், இயற்கையின் காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட உற்பத்திப் பின்னடைவும், அவர்களை சிந்தனைச் சலவைக்கு உட்படுத்தியது எனலாம்.

இத்தகைய சிந்தனைச்சலவையானது, அவர்களை உற்பத்தி முயற்சியிலிருந்து பின்வாங்கவே வழிசெய்கின்றது ஏன் தெரியுமா?

தமது உற்பத்திச் செலவுடன் ஒப்பிடுகையில், வருவாய் குறைவாகக் காணப்படுவதால், தாம் உற்பத்திக்காக செலவுசெய்யும் பணத்தினைக் கொண்டு, தமக்குத் தேவையான நெல் முதலிய உற்பத்திப் பண்டங்களை கொள்வனவு செய்துகொண்டு, உற்பத்தி நிலையினைப் புறக்கணிப்பவர்களாகவே காணப்படுகின்றனர். இதனால், விவசாய நிலங்களில் பாரிய நிலப் பரப்பு - தரிசு நிலங்களாக மாற்றமடைய வழி ஏற்படுவதோடு, உணவு உற்பத்தியில் உருவாகி வரக்கூடிய தன்னிறைவுக் கோட்பாடும் சிதைவு பெறத்தொடங்கிவிடுகின்றது.

எனவே, இத்தகைய அபாயநிலையினைத் தடுப்பதற்கு, விவசாய உற்பத்திகளை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டோர் ஈடுபடுதல்வேண்டும்.

இதற்காக மானியங்களை வழங்கலாம் (இது உற்பத்தி செலவை குறைக்கும்) அத்தோடு, தொழிலாளர் பற்றாக்குறையினை தவிர்ப்பதற்கு, சட்டபூர்வமான ஊழியச் சந்தை ஒன்றினை உருவாக்கி, ஒரு முகாமையின் கீழ் செயற்படுத்தப்படுமாக இருந்தால், இவை தேவைக்கு ஏற்ப பகிர்ந்தளிக்கப்படலாம்.

மேலும் நெல் உற்பத்திக்கான மாற்றீட்டு பண்டங்களில் விரிவாக்கத் தொழிற்சாலைகளை உருவாக்குதல் (இதனால் நெல்லின் கொள்வனவு விலை அதிகரிக்கும்).

உதாரணமாக ஒரு நிறுவனம் நெல்லினைப்பெற்று அதனைப் பச்சை அரிசி, புழுங்கல் அரிசி, அரிசிமா புழுங்கல் அரிசி ரவ்வை, பச்சை அரிசி தோசைமா, பொரி அரிசிமா, நெற்பொரி, அவல் எனப் பல்வேறு வடிவங்களில் பொதி செய்து விற்பனைசெய்யலாம்.

இவற்றோடு கால் நடைத் தீவன உற்பத்தி (தவிடு) மற்றும் கோழிகளுக்கான உணவு உற்பத்தி (குறுணல் அரிசி) என்பவற்றோடு குளிரூட்டப்பட்ட நெல் உணவு வகைகளையும் தயார் படுத்திச் சந்தைக்கு விடலாம். இதனால் நெகிழ்ந்து போயிருக்கும் விவசாயிகளின் மனப்பாங்கில் உற்பத்தியில் வன்மமான ஓர் உள நிலைப்பாட்டினைத் தூண்டிவிடலாம்.

எது எவ்வாறாக இருப்பினும், இன்றைய நிலையில் தென்மராட்சி விவசாயிகளைப் பொறுத்தவரை அவர்களின் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட பாதிப்புக்கு ஈடாக, நிவாரணக் கொடுப்பனவுகள் தேவைப்படும் நிலையிலேயே உள்ளனர்.

ஏனெனில், நெல் கொள்வனவிற் கான உத்தரவாத விலைத் தீர்மானமும், அதனடிப் படையிலான கொள்வனவு முயற்சிகளும் பின்பற்றப்படுவ தில்லை என்பதாகும். ஆனால், வன்னிப் பிரதேசத்தில் உள்ளூர் நிர்வாக அமைப்புக்களால் இவை மேற்கொள்ளப்படுகின்றன.

இங்கு, உத்தரவாத விலைத்திட்டம் என்பதில் இரு எண்ணக் கருக்கள் முன்வைக்கப் படுகின்றன.

**1. குறைந்தபட்சக் கட்டுப்பாட்டு விலைத் தீர்மானம்.**

**2. உயர்ந்த பட்சக் கட்டுப்பாட்டு விலைத் தீர்மானம் (உயர்வெல்லை விலை) என்பனவாகும்.**

இங்கு குறைந்த பட்சக் கட்டுப்பாட்டு விலைத் தீர்மானமே நெல் உற்பத்தியாளர்களுக்கு அனுகூலமாகும். குறைந்தபட்சக் கட்டுப்பாட்டு விலை என்பது, ஒரு கிலோ நெல்லுக்கான விலையானது - உதாரணத்துக்கு 13/= என எடுத்துக்கொண்டால், இதற்கு குறைவாகக் கொள்வனவின்போது நெல்லுக்கான கொள்வனவு விலையைச் சட்டப்படி செலுத்தமுடியாது என்பதாகும். இதனால், நெல்லுக்கான விலையினை இந்தப் புள்ளியிலிருந்து மேல்நோக்கி நகர்த்திச் செல்வதற்கு உற்பத்தியாளனுக்கு வாய்ப்புண்டு.

ஆனால், உயர்ந்த பட்சக் கட்டுப்பாடு எனபதால் விளங்கிக்கொள்ளப்படுவது, ஒரு கிலோ நெல்லுக்கான விலை 13/= எனத் தீர்மானிக்கபபட்டால், உற்பத்தியாளனால் இந்த விலைப் புள்ளிக்கு மேல் சட்டப்படி ஒருசதமேனும் உயர்ததி விற்கமுடியாது என்பதாகும். இதனால் இது கொள்வனவாளனுக்கு வாய்ப்பாக அமைய - இதன் விலையினைப் போட்டி அடிப்படையில், குறிப்பிட்ட பெறுமதியிலிருந்து வீழ்ச்சியடையச் செய்யமுடியும்.

இது இவ்வாறு இருக்கையில், இத்தகைய எண்ணக்கருக்களிடையே போதிய விளக்கமின்மை கிராமப்புற விவசாயிகளிடம் காணப்படுவதாலும், கொள்வனவாளர்கள் அதனைப் பராதீனப்படுத்த முனையாமையாலும், இவ்விருசாராருக்குமிடையே புதியதொரு எண்ணக்கருவின் மாயத்தோற்றப்பாட்டால் 'நிலைப்படுத்தப்பட்ட' கட்டுப்பாட்டு விலைத் தீர்மானத்தினையே பின்பற்றுகின்றனர்.

இங்கு நிலைப்படுத்தப்பட்ட (நகராவிலை) கட்டுப்பாடு என்பதால் கருதப்படுவது - குறிப்பிட்ட நெல்லிற்கு உயர்ந்த அல்லது குறைந்த பட்சக்கட்டுப்பாட்டு விலை தீர்மானிக்கப்படுகின்றபோது, அதன் எல்லைப் பெறுமானத்தினையே தமது விற்பனை அல்லது கொள்வனவு விலையாகத் தீர்மானிக்கின்றனர்.

இங்கு குறைந்தபட்சம் 13/= எனத் தீர்மானிக்கப்படுகின்றபோது, இதற்குமேல் கூடவிலை கொடுக்கக் கொள்வனவாளர்கள் போட்டியிடுவதில்லை. இதேபோல் உயர்ந்த பட்சம் 13/= எனத் தீர்மானிக்கப்படுகின்றபோது, இதற்குக் கீழ் விலைக்குறைப்புச்செய்ய உற்பத்தியாளர்கள் சம்மதிப்பதில்லை.

இந்தநிலையில், அரசால் தீர்மானிக்கப்படும் எந்த விலையாக இருந்தாலும், அதன் எல்லை விலையைப் பின்பற்றும் நிலையே 'நிலைப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு விலைத்தீர்மானம்' ஆகும். இந்த நிலைக்கு பொருளாதார எண்ணக் கருக்கள் பற்றிய பரந்த அறிவற்ற பாமர உற்பத்தியாளனும், கொள்வனவாளனும் காரணமாக அமைகின்றனர்.

இத்தகைய பொருளாதார விளைவுளின் தாக்கமும், இயற்கையின் சீற்றமும், போர்முறையின் அழிவுகளும் தென்மராட்சி நெல் உற்பத்தியில் பெரும் பின்னடைவுப் போக்கினைத் தூண்டியதோடு, நெற்செய்கையானது ஒரு இலாபகரமற்ற செயற்பாடாக மாற வழிவகுத்தது எனலாம்.

மேலும் இத்தகைய பிரச்சினைகளோடு, பல்வேறு நெருக்கீடுகளுக்கும் அவர்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இவர்களுக்குப் பயிர் காப்புறுதி காணப்பட்டபோதும், இயற்கை அழிவுகளுக்கு இவை சம்பந்தப்பட்ட நிறுவணங்களால் ஒழுங்காகப் பெற்றுக்கொடுக்கப்படுவதில்லை. இத்தோடு, இவர்கள் நிரந்தர ஊதிய மற்ற ஒரு சாராரகவே காணப்படுகின்றனர்.

கடந்தகாலங்களில் 'விவசாய ஓய்வூதியம்' எனும் திட்டத்தின்கீழ் இவர்கள் உள்வாங்



கப்பட்டபோதும், இடப்பெயர்வைத் தொடர்ந்து இவை செயலிழந்து போயுள்ளது.

இதற்குப் பல்வேறு காரணங்கள் அடிப்படையாக அமைகின்றதைக் காணலாம். மக்கள் இடப்பெயர்வால், வயல் நிலங்களைப் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தாமையால், அவர்களுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்பு தமது தொடர் சந்தாவைச் செலுத்தமுடியாதுபோனது.

இத்தோடு, இந்த நடைமுறைகளுக்குப் பொறுப்பான திணைக்களங்களும் இடம்பெயர்ந்தமையால், அவற்றினால் குறிப்பிட்ட தவணைகளில் அறவீடு செய்யமுடியாது போனமை, இவற்றைவிட இவர்களின் குடும்ப நலன்காக்கும் குடும்பத் தலைவர்கள் இறப்பு, ஊனம், வேறு வகையில் இயலாமை என்பவற்றுக்கு ஆட்பட்டமை, இதனால் இவர்கள் ஓய்வூதிய சந்தாவை ஒழுங்கான முறையில் பெற்றுக்கொள்ள முடியாதுபோனது.

இத்தகைய நடைமுறைகள் ஓய்வூதிய மீளளிப்பிலும் தாக்கத்தினை ஏற்படுத்தியது.

இத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே வானத்தைநம்பி தென்மராட்சி மக்களால் 'மானாவாரி' நெற்செய்கை செய்யப்பட்டது. ஆனால், இவற்றில் பெரும்பகுதி வரட்சியினால் அழிந்துபோக - தற்பொழுது எஞ்சியவை மழைநீரில் அமிழ்ந்துபோயுள்ளது. இந்த நிலைமையானது, மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போன்றது.

இத்தகைய சூழ்நிலை விரக்தியிலும் அவர்கள் சளைக்காது, தமது ஜீவனோபாயத் தேவையை நிறைவேற்றவாவது அறுவடை மேற்கொள்ள முயற்சிக்கின்றனர்.

ஆனால், நீரில் அமிழ்ந்துள்ள நெல்லினை அறுவடை செய்ய ஒரு பரப்புக்கு 200/= முதல் 250/= வரை கூலியாகக் கொடுக்க வேண்டியுள்ளது. இதனால் ஒரு ஏக்கருக்கு 4800 முதல் 6000 ரூபாவரை அறுவடைச் செலவு ஏற்படுகின்றது.

நீரில் மூழ்கியுள்ள நெற்களை வெட்டி, அதை நீரற்ற பிரதேசத்துக்கு நகர்த்தி, பின் சூரிய ஒளியில் உலர்த்துதல் போன்ற தொடர் செயற்பாடுகள் காணப்படுதலே இத்தகைய கூலி உயர்விற்குக் காரணமாகும்.

இப்படிப்பட்ட பாரிய சுமைகளைக் கொணடு நகரமுடியாது, தமது மூளைக்கு விலங்கிட்டு, சிந்தனையைச் சிறைப்பிடித்து, ஜீவனோ பாயத்துக்காகப் போராடும் தென்மராட்சி விவசாயிகளின் நிலைகண்டு யாரும் இரங்குவார்களா?

அப்படியாயின் இவர்களின் பாதிப்பினை மனதில் கொண்டு, கடந்தகால விவசாய ஓய்வூதியத்துக்கான செலுத்தப்படாத கட்டணங்களைத் தள்ளுபடி செய்தும், நெற்பயிர்களுக்கான இயற்கை அழிவு (வெள்ளம், வரட்சி) காப்புறுதிகளைப் பெற்றுக்கொடுத்தும், ஏனைய மானிய மற்றும் வரிச் சலுகைகளை வழங்கியும், மீட்கப்படாத விவசாய நிலங்களை - மிதிவெடி அபாயத்திலிருந்து மீட்டும் உதவிபுரிவார்களா? இது சம்பந்தப்பட்டவர்களுக்கு சமர்ப்பணம்.

மனம் வைத்தால் மார்க்கமுண்டு.

# ஈரான் ரயிலில் ஏற்பட்ட தீவிபத்தில் 180 இற்கு மேற்பட்டோர் உயிரிழப்பு!



ஈரானில் சரக்கு ரயிலொன்று தனது கட்டுப்பாட்டையிழந்து பாதையிலிருந்து விலகி வெடித்துச் சிதறியதில் 180 இற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாக ஈரானிய தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. கொல்லப்பட்டவர்களின் முழு எண்ணிக்கை இதுவரை கணிக்கப்படவில்லை.

கோரசான் மாகாணத்தில் நெய்சாபூர் என்ற நகரில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. விபத்துக்குள்ளான வண்டித்தொடரில் கந்தகம், எரிபொருள், செயற்கை உரம், பஞ்சுப்பொதிகள் ஆகியன ஏற்றிச்செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழுந்துவிட்டெரியும் தீயினை அணைக்க முற்பட்ட பல தீயணைக்கும் படையினர் மரணமடைந்துள்ளனர். பலவிதமான வெடிபொருட்களையும், தீப்பற்றக்கூடிய பொருட்களையும் ஏற்றிச் சென்றமை வண்டித்தொடர் வெடித்துச் சிதறியமைக்குக் காரணமாக அமைந்தது எனத்தெரிவிக்கப்பட்டது.

சிறிய நிலநடுக்கம் ஒன்று வண்டியைத் தடம்புரளச் செய்திருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து 6 மைல் தூரத்திற்குள் அமைந்திருந்த பல வீடுகளின் யன்னல் கண்ணாடிகள் உடைந்து சிதறியுள்ளன. மேலும், எண்ணெய்த் தாங்கிகள் வெடித்துச் சிதறிய ஒலியை 75 கிலோமீற்றர் வரை கேட்கக்கூடியதாக இருந்தது. பிரதேச ஆளுனர், நகர மேயர், தீயணைக்கும் படைத் தலைவர் ஆகியோரும் கொல்லப்பட்டவர்களில் அடங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

4 ஹெலிகொப்டர்கள், 25 அம்புலன்ஸ்கள், 70 மீட்புப் பணியாளர்கள் சம்பவம் நடைபெற்ற இடத்தில் பாதிக்கப்பட்டவர்களை வைத்தியசாலைகளுக்கு எடுத்துச்செல்வதற்குத் தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர் என மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## தலிபான் போராளிகளுக்கெதிரான பாகிஸ்தான் படையினரின் நடவடிக்கைக்கு அமெரிக்க இராணுவ உயரதிகாரி பாராட்டு!





ஆப்கானிஸ்தானுடனான பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் - அல்கொய்டா, தலிபான் தீவிரவாதிகளின் நடமாட்டத்திற்கெதிராக பாகிஸ்தான் படையினர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பாக அமெரிக்க இராணுவத்தின் உயர் அதிகாரியான டேவிட் வர்னோ பாராட்டுத் தொிவித்துள்ளார்.

அல்கொய்டாவின் தலைவர் பின்லேடனும் அவரது குழுவினரும் இந்த எல்லைக்கூடாக தமது நடமாட்டங்களை மேற்கொண்டு வருவதாகவும், இந்த ஆண்டிற்குள் பின்லேடன் கைது செய்யப்படலாமெனவும் டேவிட் வானோ தெரிவித்தார்.

பாகிஸ்தான் படையினரும், எல்லையில் அமைந்துள்ள ஆப்கானிஸ்தான் அரசு சார்பான குழுக்களும் இணைந்து தீவிரவாதிகளைத தேடும்பணியில் ஈடுபட்டுள்ளதாகவும், செய்மதியூடாக பென்டகனுடன் தொடர்புகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிலிருந்து அல்கொய்டா விரட்டப்படும்போது, கைதுகளை இலகுவில் மேற்கொள்ளமுடியுமெனவும், டேவிட் வானோ மேலும் தெரிவித்தார்

உலக நோக்கு

## ஜெருசலேம் பகுதியில், இஸ்ரேல் யூதக்குடியிருப்புகளை அமைக்க 22 மில்லியன் டொலர் ஒதுக்கீடு



கிழக்கு ஜெருசலேமில் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் கூடுதல யூதக் குடியிருப்புக்களைக் கட்டியெழுப்புவதறகு இஸ்ரேலிய அரசு 22 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளது.

காஸா பிரதேசத்திலிருந்து யூதக் குடியிருப்புகளை அகற்றுவதற்கு திட்டமிட்டுள்ளதாக இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் இரு வாரங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார். ஆனால், தற்போதைய அறிவிப்பினால் பலஸ்தீனர்களிடையே ஆத்திர உணர்வு மேலோங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒதுக்கப்பட்டுள்ள நிதி காஸா பிரதேசத்தின் எந்தப் பகுதிகளின் அபிவிருத்தி பணிகளுக்குச் செலவுசெய்யப்படவுள்ளதென தெரிவிககப்படவில்லை. ஜெருசலேத்தின் கிழக்கு பகுதியிலும், மேற்குக்கரைப் பகுதியிலும் இந்த நிதி செலவுசெய்யப்படலாமெனக் கருதப்படுகின்றது.

இதனிடையே இந்தநிதி நெருகவ் பாலைவனத்திலும், கலிலீ பிரதேசத்திலும் உபயோகிக்கப்படலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேல், பலஸ்தீன பிரச்சினைகளின் தீர்வற்கான பாதை வரைபு நகலில் 1967 ஆம ஆண்டு போரில் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் அமைக்கப்பட்ட யூதக் குடியிருப்புகளை அகற்றுவதென சம்மதம் தெரிவிக்கப்படடுள்ளது.

இஸ்ரேலின் பொருளாதாரம் பல நெருக்கடிகளை சந்தித்துவரும் நேரத்தில், இவ்வகையான அறிவிப்பொன்றை மேற்கொண்டமையை எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.

இதனிடையே பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத்திற்கும், பிரதமர் அகமட் கூரேக்குமிடையிலான உறவுகள் சீர்குலைந்துள்ளதால் அகமட் கூரே பதவியிலிருந்து நீக்கப்படலாம் என்ற கருத்துக்கு பிரதமர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீன பாராளுமன்றத்தில் நிதி நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதற்கு அமெரிக்க உதவியைப் பெறுவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் தொடர்பாக இரு தலைவர்களிடையேயும் முரண்பாடுகள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இந்திய - பாகிஸ்தான் அதிகாரிகளிடையே இரண்டு நாள் பேச்சுகள் நேற்று ஆரம்பம்!



(இஸ்லாமாபாத்)

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடையே தொடரும் பகைமைக்கும், நம்பிக்கையீனத்திற்கும் தீர்வுகாண்பதற்கான சமாதானப் பேச்சுவார்த்தைகள் நேற்று ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரு நாடுகளின் வெளிநாட்டமைச்சின் அதிகாரிகளுக்கிடையில் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் இரு நாட்கள் தொடரும் பேச்சுவார்த்தையில் சமாதானத்தீர்விற்கான திட்டங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

காஷ்மீர் பிரச்சினைக்கான தீர்வும் இந்தத் திட்டங்களில் அடங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தப் பேச்சுவார்த்தைகளை எவ்வளவு கால எல்லைக்குள் முடிப்பது தொடர்பாகவும், பேச்சுக்களை எவ்வாறு நடத்துவது தொடர்பாகவும் இரு நாடுகளின் பிரதிநிதிகளிடையே பரந்தளவில் புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளதாக, பாகிஸ்தானிய செய்திநிறுவனமொன்று கருத்துத் தெரிவித்துள்ளது.

காஷ்மீர் பிரச்சினையை தொடரும் பேச்சுவார்த்தையின் இறுதியிலும், சிறிய பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுப்பதெனவும் இரு நாடுகளின் பிரதிநிதிகள் தீர்மானித்துள்ளனர்.

பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சின் அதிகாரி ரிசா கொக்காரும், இந்திய வெளிநாட்டமைச்சின் அதிகாரி சசாங்கும் நேற்றுமுன்தினம் இஸ்லாமாபாத்தில் தீர்மானத்தின் இறுதி முடிவுகளை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ் பற்றன் இஸ்லாமாபாத் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பேச்சுக்களில் முழுமையான வெற்றியை உடன் எதிர்பார்க்கமுடியாதென அவர் தெரிவித்திருக்கிறார்.

காஷ்மீர் பிரச்சினைக்கு போரின்மூலம் தீர்வுகாணமுடியாது என்பதன் காரணமாக இரு நாடுகளும் பேச்சுவார்த்தைமூலமான தீர்விற்கு முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.




அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜோன் கெறி - 17 மானிலங்களில் , 15 மானிலங்களில் வெற்றியடைந்த நிலையில் தனது ஆதரவாளர்களுக்குக் கையசைக்கும் காட்சி

## ஈராக்கிலுள்ள போலந்து படைத்தளம் மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல்!



ஈராக்கில் கிலா என்ற நகரில் போலந்துப் படைத்தளமென்றில் 700 கிராம் நிறைகொண்ட வெடிபொருள் நிரப்பப்பட்ட லொறி ஒன்றினால் தற்கொலைத் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்தத் தாக்குதலில் 11 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் 58 சர்வதேச போர்வீரர்களும், 44 ஈராக்கியர்களும் அடங்கியுள்ளதாக கூட்டுப் படையினர் தெரிவித்தனர். காயமடைந்த போர்வீரர்கள், பிலிப்பைன்ஸ் ஹங்கேரி, போலந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர். மேலும் படைத்தளத்திற்கு அருகில் அமைந்துள்ள கட்டடங்களும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் வெடிபொருள் நிரப்பப்பட்ட வண்டியொன்று காவலரனின் வேலியில் மோதியபோது காவல் கட மையில் ஈடுபட்டிருந்த படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு சாரதி பலியானதாகவும், ஆனால் லொறி தொடர்ந்துசென்று கட்டடத்தின் சுவருடன் மோதி வெடித்துச் சிதறியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதிகரித்துவரும் தாக்குதல்களினால் கூட்டுப்படையினரின் படைத்தளங்கள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனாலும், தீவிரவாதிகளால் தொடர்ந்தம் அச்சுறுத்தல் காணப்படுவதாக பி.பி.சி யின் ஜொனி டைமொன்ட் தெரிவித்தார்.

நமது ஈழநாடு

The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

# தமிழின உயிர்கொலை நாள் அம்பாறையில் இன்று அனுஷ்டிப்பு

அம்பாறை மாவட்டத்தின் "தமிழின உயிர்க்கொலை நாள்" இன்று அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது.

கடந்த கால விடுதலைப் போராட்டத்தின்போது, அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும், அப்பாவித் தமிழ்மக்கள் சிங்கள இராணுவத்தினராலும், ஊர்காவற்படையினர் மற்றும் சிங்கள இராணுவத்தில் இணைந்து செயற்பட்ட குழுக்களாலும் சுடப்பட்டும், உயிருடன் எரிக்கப்பட்டும், புதைக்கப்பட்டதுமான சம்பவங்களை நினைவு கூரும் வகையில் இந்தத் தமிழின உயிர்க்கொலைநாள் பிரகடனப்படுத்தப்பட்டது.

குறிப்பாக இந்த மாவட்டத்தின் இடும்பன் குளப்பகுதியில் (தங்கவேலாயுதபுரம்) வயலில் வேலை செய்து கொண்டிருந்த 108 தமிழர்கள் படையினரால் சுடப்பட்டு வைக்கோல் போட்டு எரிக்கப்பட்ட சம்பவத்தில் கொலையுண்ட தமிழ் மக்கள் இன்றைய தினத்தில் மிக முக்கியமாக நினைவு கூரப்படுகின்றனர்.

இன்றைய தினத்தை அம்பாறை மாவட்டத் தமிழர் பெருமன்றம் - "அம்பாறை மாவட்ட தமிழின உயிர்க்கொலை நாள்" எனப் பிரகடனப்படுத்தியுள்ளதுடன்,

"விழவிழ எழுவோம் விடுதலை பெறுவோம்" என்னும் கோசத்துடன் இன்றைய நாளை எழுச்சிநாளாகவும் அனுஷ்டிக்க ஏற்பாடு செய்துள்ளது.

இன்று காலை 9.00 மணிக்கு அக்கரைப்பற்று தர்மசங்கரி மைதானத்தில் மேற்படி, "அம்பாறை மாவட்ட தமிழின உயிர்க்கொலை நாள்" எழுச்சி நிகழ்வுகளின் பிரதான நிகழ்வு நடைபெறவிருக்கின்றது.

மேலும், இந்த நிகழ்வையொட்டிய எழுச்சிப் பேரணிகள் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து அக்கரைப்பற்று தர்மசங்கரி மைதானத்தை இன்று காலை வந்தடையவுள்ளன.

குறித்த தமிழினப் படுகொலைகளைச் சித்தரிக்கும் ஊர்திகளும்-பேரணிகளுடன் தர்மசங்கரி மைதானத்தை வந்தடையவுள்ளன.

அத்துடன், படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களுக்காக இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்களில் இன்று மணி ஓசை எழுப்பப்பட்டு சமயக்கிரிகைகள் இடம் பெறவிருப்பதுடன்,

அம்பாறை மாவட்டத் தமிழினப் படுகொலைகளுக்கு ஞாபகார்த்தமாக உடும்பன் குளச்சந்தியில் (தாண்டியடி) நினைவுத்தூபி ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல்லும் நாட்டப்படவிருக்கின்றது.

அக்கரைப்பற்று தர்மசங்கரி மைதானத்தில் நடைபெறவிருக்கும் பிரதான நிகழ்வில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (07)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் நியமனம், அமைச்சரவை சிபார்சுக்கு!

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைகோரி, கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துக்கு ஒரு மகஜரைச் சமர்ப்பித்துள்ளார்.

இவ்வாறு தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னரே, இந்த மகஜர் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. கல்வி அமைச்சின் சிரேஷ்ட துணைச் செயலாளர் ஏ.திஸநாயக்க கடந்தவாரம் இந்த ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் தொடர்பான கலந்துரையாடலின் போது தெரிவித்ததாக மகாசிவம் மேலும் கூறினார்.

தொடர்ச்சியாக சேலையில் உள்ள பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படவுள்ளதெனத் தீர்மானம் உள்ளதனால், இப்போது பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் உடனடியாக பணிக்குத் திரும்புவது சிறந்ததாக இருக்குமென மகாசிவம் மேலும் தெரிவித்தார்.

## தென்மராட்சியில் மூன்று கோவில்கள் வழிபாட்டுக்குப் படையினர் அனுமதி!

தென்மராட்சிப் பிரதேசத்தில் உயர் பாதுகாப்புவலயத்தில் அமைந்திருக்கும் மூன்று கோயில்களுக்கு பொதுமக்கள் சென்றுவழிபட நேற்று அனுமதி வழங்கப்பட்டது.

இராணுவத்தின் 512 ஆவது படைப்பிரிவின் பொறுப்பதிகாரி பிரகேடியர் சந்திரசிறியின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

காலை 11 மணியளவில் தனங்களப்பு முருகன்கோயில் மற்றும் காளிகோயிலுக்கும், மறவன்புலவு தோப்புப்பிள்ளையார் கோயிலுக்கும் பொதுமக்கள், பூசகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

இதனையடுத்து, நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பல ஆண்டுகளின் பின் தமது பிரதேசத்ததைச் சென்று பார்வையிட்டதுடன் ஆலய தரிசனத்தையும் மேற்கொண்டனர்.

இந்த மூன்று ஆலயங்களுக்கும் தினமும் ஆலய பூசகர்கள் சென்று பூசை இயற்றவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

தமது பிரதேசங்களைப் பார்வையிட்ட மக்கள் தாம் அந்தப்பகுதிகளில் குடியமர அனுமதிக்குமாறு அங்கு குழுமியிருந்த இராணுவத்தினரிடம் கோரினர்.

இதற்கு அந்தப் பிரதேசத்திலுள்ள வெடிபொருட்கள் அகற்றப்பட்ட பின்னர் மக்கள் குடியிருப்பதற்கு அனுமதியளிக்கப்படும். என இராணுவ அதிகாரிகள் மக்களுக்கு உறுதியளித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக தனங்களப்புப் பகுதியில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய படைத்தரப்பு பொது மக்களுக்கான சிவில் சேவை விரைவில் அந்தப் பகுதியில் இடம்பெறவுள்ளதுடன் இந்த வருட இறுதிக்குள் மக்கள் குடியமர்வதற்கும் ஒழுங்கு செய்யப்படும் எனவும் தெரிவித்தனர். (ப)

## வாக்காளர் அட்டைகள் அச்சிடும் பணி பூர்த்தி!

### அரசாங்க அச்சகர் தகவல்

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கும் வாக்காளர்களுக்கான 14 மில்லியன் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் அதற்கான அச்சகத்தால் அச்சிடப்பட்டுவிட்டதாக அரசாங்க அச்சகர் நெவில் நாணயக்கார தெரிவித்தார்.

வாக்காளர் அட்டைகள் அச்சிடும் பணி பூர்த்தியாகிவிட்டதால், இவற்றில் 80 சதவீதமானவை தேர்தல் ஆணையாளரின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

இதேவேளை - வாக்குச் சீட்டுக்கள் அச்சிடும் பணிகள் எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும். இந்தவாக்குச் சீட்டுக்களை அச்சிடுவதற்காக, 80 தொன் விசேடதர கடதாசி பிரிட்டனிடம் இருந்து இறக்குமதி செய்யப்பட்டிருப்பதாகவும், அரசாங்க அச்சகர் நெவில் நாணயக்கார தெரிவித்தார்.

## 24 மணி நேரத்துக்குள் 5 தேர்தல் வன்முறைகள்!

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக ஐந்து வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தேர்தல் வன்முறைகளைத்தடுப்பது தொடர்பானவிடயங்களுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி காமினி நவரட்ன தெரிவித்தார்.பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியானதை அடுத்து புத்தளம் பகுதியில் அதிகளவிலான வன்முறைச்சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. கடந்த 24 மணித்தியாலத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஐந்து வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றதாக பதிவாகியுள்ளது. எனினும் பாரதூரமான சம்பவம் ஏதும் இடம் பெறவில்லை என காமினி நவரட்ன தெரிவித்தார். (01)

## கண்காணிப்புக்குழுத் தலைவர் வவுனியாவுக்கு நேற்று விஜயம்!

வவுனியாவிற்கு நேற்று விஜயம் செய்த கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்கள் புலிகளைச சந்தித்து உரையாடினார்.

இந்தச் சந்திப்பில், வவுனியா மாவட்டப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் - புலிகள் தரப்பினரைச் சந்தித்து உரையாடினர்.

தொடர்ந்து, பிரமதரின் சமாதான நடவடிக்கைச்செயலக அதிகாரி ராஜவிக்கிரமசிங்கவுடன் இணைந்து, தமிழீழ விடுதலைப் புலிகள், பொலிஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகளுடனும் இவர் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

## வடக்கு - கிழக்கு ஆசிரிய ஆட்சேர்ப்பு விண்ணப்பத் திகதி மேலும் நீடிப்பு!

### கடல்வளப் பாடமும் உள்ளடக்கம்

வடக்கு - கிழக்குப்பகுதியில் தமிழ்மொழி மூலம், ஆயிரம் ஆசிரியர்களை போட்டிப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுப்பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில், கடல்வள தொழில்நுட்ப பாடம் எனும் புதிய பாடம் சேர்க்கப்பட்டு ஆசிரிய விண்ணப்பத்தின் முடிவுத் திகதியும் நீடிக்கப்படவுள்ளது.

இவ்வாறு இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது.

இந்தப் பரீட்சை தொடர்பாக ஏற்கனவே வெளிவந்த வர்த்தமானி அறிவித்தல் திருத்தப்பட்டு, மீண்டும் புதிதாக விளம்பரப்படுத்தப்படவுள்ளது.

அத்துடன், ஏற்கனவே இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள், மீள விண்ணப்பிக்கும் போது பணம் செலுத்தாமல் முதலில் விண்ணப்பித்து பணம் செலுத்திய பற்றுச் சீட்டின் இலக்கத்தை குறித்து பாடத்தை மாற்றி விண்ணப்பிக்கலாம்.

ஏற்கனவே கொழும்பிற்கு விண்ணப்பித்தவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பரீட்சை நடக்கும் போது, பரீட்சை நிலையங்களை மாற்றுவது தொடர்பான, ஆலோசனையும் திருத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படுமெனவும் மகாசிவம் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சைக்கான திகதியை குறித்து அனுப்புமாறு பரீட்சை ஆணையாளரிடம் கல்வி அமைச்சு கோரியுள்ளது. எனவே பரீட்சை ஆணையாளர் இந்த திகதியை குறித்து அனுப்பியதும் வர்த்தமானி பிரசுரிக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நூறு கூட்டங்களில் பிரதமர் பேசுவாராம்

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 100 கூட்டங்களில் பேசத் திட்டமிட்டுள்ளார்.

நாடு முழுவதிலும் நடைபெறவுள்ள 100 கூட்டங்களில் பிரதமர் கலந்துகொண்டு பேசுவார். முதலாவது கூட்டம் கண்டியில் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறும்.

20 மாவட்டங்களில் நடைபெறும் கூட்டங்களில் பிரதமர் கலந்துகொள்வார் என்று ஐ.தே.க தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

### உறுதியளித்த நிதியை...

வேறுபாடுகள் நீக்கப்படாமல், முறிவடைந்தமை அதிருப்தியளிக்கிறது.

எதிர்வரும் ஏப்ரல் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் சுந்திரமானதாகவும், நீதியானதாகவும் நடைபெறுவதற்கு, அரசியல் வன்முறைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

அரசியற்கட்சிகள் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பில் மிகவும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும். அவ்வாறு இவர்கள் செயற்பாட்டேலேயே தேர்தலின் பின்னர் சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு வசதியாக இருக்கும்.

அத்துடன், தேர்தல் காலத்தில் மதம் மற்றும் இன வன்முறை என்பன முற்றிலுமாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

யுத்தநிறுத்தம் மற்றும் சமாதான முயற்சிகள் தொடர்பில் விடுதலைப் புலிகள் காட்டிவரும் அர்ப்பணிப்பை வரவேற்றுள்ள இந்த நாடுகள், தற்போதைய தேர்தல் காலத்திலும் அதற்குப் பின்னரும் புலிகள் மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டுமெனவும் கேட்டுள்ளன.

ரோக்கியோ மாநாட்டில் உறுதியளித்தபடி இலங்கைக்கான உதவியினை இந்த நாடுகள் வழங்குமெனவும் ஆனால், சமாதான முயற்சிகளின் வேகத்தைப் பொறுத்தே இது அமையுமெனவும், இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான மனிதாபிமான உதவிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுமெனவும், இலங்கையில் தேர்தல் முடிந்த பின்னர் ஒரு கூட்டத்தைக் கூட்டவுள்ளதாகவும் உதவி வழங்கும் இந்த நாடுகள் தெரிவித்தன.

### பொலிஸ் மா...

ரிகா பொலிஸ் மா அதிபருக்கு சேவை நீடிப்பு வழங்கியுள்ளார்.

கடந்த ஜனவரி 28 ஆம் திகதி எழுதப்பட்ட - ஓய்வு பெறுவது தொடர்பான பொலிஸ் மா அதிபரின் கடிதத்தையும் ஜனாதிபதி சந்திரிகா ரத்துச் செய்திருப்பதாகத் தெரியவருகிறது. தற்போதைய அரசியல் நிலமை மற்றும் நாடாளுமன்றத்தேர்தல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டே இந்த சேவை நீடிப்பு அறிவிக்கப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

### நீதியான தேர்தல்...

மேலும் தெரிவித்ததாவது, தேர்தல் சுதந்திரமானதாகவும், நீதியானதாகவும் நடத்த சகல அரசியல் கட்சிகளும் தமது ஆதரவை வழங்கவேண்டுமென கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதுவர் அகியோ சுடாவும் கேட்டுள்ளார்.

### தேர்தல்...

விடுதலைப் புலிகளே வேட்பாளர்களை நியமிக்கட்டும் அவர்கள் வெற்றிபெற அனைவரும் ஒத்துழைப்புக் கொடுப்போம் எனக் கூறிவிட்டு கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்தார்.

எனினும் இந்தக் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. ஆனால், வேட்பாளர்கள் தொடர்பான இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. வேட்பாளர்கள் குறித்து முடிவு எடுக்கப்படுவது ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை தேர்தல் நியமனங்கள் குழுவின் கூட்டத்தில் இழுபறி நிலை ஏற்பட்டிருப்பதால் கட்சியின் மாவட்டகிளைகள்மூலம் வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் திட்டங்கள் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

### கூட்டமைப்புடன்...

மாவட்டங்களில் மலையக மக்கள் முன்னணி போட்டியிடும்.

தமிழ் மக்கள் செறிவு குறைந்த இடத்தில் அதற்கேற்ற வாய்ப்புக்களுடன் மலையக மக்கள் முன்னணி தேர்தலில் பங்குகொள்ளும்,

இது பற்றிய இறுதி முடிவு ஓரிரு நாட்களில் எடுக்கப்படும். இதற்காக மீண்டும் வன்னிக்கு வந்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடப்படும் எனத் தெரிவித்தார்.

அதேவேளை நேற்று மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் குழுவினரும் தனியாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளருடன் கலந்துரையாடலை நடத்தினர்.

தமிழ்த் தேசிய கருமங்களை வலுப்படுத்த தாம் தயார் என்று தாம் தெரிவித்துள்ளதாகவும் மேல் மாகாண அரசியல் நிலைப்பாடுகளால் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்தே தேர்தலில் போட்டியிடவுள்ளதாகவும் மனோ கணேசன் தெரிவித்தார்.

ஆயினும் ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்தே தான் தமிழ்த் தேசிய ஐக்கியத்துக்கு ஆதரவாக செயற்படப்போவதாகவும் அவர் மேலும் கூறினார். இதனிடையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே தேர்தல் தொடர்பாக இறுதி முடிவு செய்யும் கலந்துரையாடல் நாளை நடைபெறவுள்ளது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.